வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 01 22.05.2021 சனிக்கிழமை இதழ் : 171 பக்கங்கள் : 16




## முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி உடைப்பு

# ஆவணப்படுத்த உதவுமாறு ஐ.நாவிடம் தமிழ் கட்சிகள் கூட்டாகக் கோரிக்கை!

கொழும்பு, மே 22

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடிக்கப்பட்ட சம்பவத்தை ஆவணப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை ஐநா மனித உரிமை ஆணையாளரிடம் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்துள்ளார்கள். இது குறித்த கோரிக்கையை உள்ளடக்கிய கடிதம் ஒன்று 13 பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. 02

## விமான சேவைகள் அனைத்தும் இரத்து

### அரசு அறிவிப்பு

கொழும்பு, மே 22

நேற்று நள்ளிரவு முதல் எதிர்வரும் 31ஆம் திகதி நள்ளிரவு வரை அனைத்து விமான சேவைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று சிவில் விமான சேவைகள் அதிகார சபை அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இலங்கையிலிருந்து பயணிக்கும் பயணிகளுக்கு எவ்வித தடையும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சரக்கு விமானங்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது எனவும் சிவில் விமான சேவைகள் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் விமான சேவைகள் அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (இ)



## குடத்தனையில் கள்ள மண் ஏற்றிவந்த வாகனம் மீது சூடு

### தப்பியோடிய மூவரில் ஒருவர் கைது

வடமராட்சி கிழக்கு, மே 22

வடமராட்சி கிழக்கில் மணல் கடத்தலில் ஈடுபட்ட கும்பல் பயணித்த ஹண்டர் வாகனம் மீது விசேட அதிரடிப் படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் குறித்த வாகனம் விபத்துக்குள்ளாகியது. அதில் பயணித்த மூவர் தப்பித்த நிலையில், அவர்களில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் குடத்தனையில் இடம் 02

## பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு பயணக் கட்டுப்பாட்டை செயற்படுத்துங்கள்

### அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ஆலோசனை

கொழும்பு, மே 22

இலங்கையில் பயணக் கட்டுப்பாடுகளை விதிக்கும்போது பொது மக்களுக்கும் நாட்டின் பொருளாதாரத்துக்கும் பாதிப்பு இல்லாத வகையில் அதனைச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

நேற்றிரவு 11 மணி முதல் 02



## மேலும் 3,538 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, மே 22

இலங்கையில் மேலும் 3 ஆயிரத்து 538 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 58 ஆயிரத்து 324 ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை 02

## 8 மாத கர்ப்பவதியை கோவிட் மையத்தில் இரவுவேளை இறக்கிச் சென்ற அவலம்!

யாழ்ப்பாணம், மே 22

எட்டு மாதம் நிரம்பிய கர்ப்பவதியை எந்த ஏற்பாடுகளும் இன்றி இரவு 8.30 மணியளவில் வட்டுக்கோட்டை கொரோனா தடுப்பு மையத்தில் கொண்டு சென்று இறக்கி விட்டு சென்றுள்ளனர் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினர்.

அவர்களின் பொறுப்பற்ற இந்த செயலால், அந்த கர்ப்பவதி பெண் பல அசௌகரியங்களுக்கு உள்ளானார். அத்துடன், அவரை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்து 02

## நேற்றிரவு முதல் முடங்கியது நாடு

கொழும்பு, மே 22

இலங்கை முழுவதும் நேற்றிரவு முதல் எதிர்வரும் 28 ஆம் திகதி வரையில் இரண்டு கட்டங்களாக முழு நேரப் பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள் 02

## வடக்கில் 80 பேருக்கு தொற்று:

### யாழில் 41, கிளிநொச்சியில் 25

யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாணத்தில் 41, கிளிநொச்சியில் 25 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 80 பேருக்கு நேற்று கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் 02

## சனக்கூட்டத்தால் திணறியது யாழ்.!

யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாணம் நகரில் நேற்று பொருள் கொள்வனவுக்காக திரண்ட மக்கள் கூட்டத்தால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

நாடளாவிய ரீதியில் நேற்றிரவு 11 மணி முதல் முழுமையான பயணத் 02




## வாக்களிப்பில் கலந்துகொள்ளாதது ஏன்? ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விளக்கம்

கொழும்பு, மே 22

கொழும்புத் துறைமுக நகர் சட்டமூலத்தில் சாதகமும் பாதகமும் காணப்படுவதால், பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கொழும்புத் துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலம் மீதான வாக்கெடுப்பில் ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 5 உறுப்பினர்களும் கலந்துகொள்ளவில்லை. 02

## ஆவணப்படுத்த...

கடந்த 12 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி உடைத்து சேதமாக்கப்பட்டது. இராணுவ மற்றும் பொலிஸ் பாதுகாப்பில் இருந்த தூபி உடைக்கப்பட்டதற்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்று தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கண்டனத்தை வெளியிட்டனர்.

இந்த நிலையில், ஐநா மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தில் இதை ஆவணப்படுத்த வேண்டும் என்ற முயற்சியில் கடிதம் தயாரிக்கப்பட்டு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரினதும் கையொப்பம் பெறுவதற்கான முயற்சி முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், உறுப்பினர்களும் கையொப்பமிட்டனர். இக்கடிதம் ஐ.நாவிற்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி ஹாநா சிங்கர் மூலமாக ஐ.நா. மனித உரிமை உயர்ஸ்தானிகருக்கு ஆவணப்படுத்தக் கோரிஅனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில், "2009 மே 18ல் முடிவடைந்த கொடிய யுத்தத்தில் கொல்லப்பட்ட தமிழ் மக்களை நினைவு கூருமுகமாக முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபி அண்மையில் அரச படையினரால் உடைத்து சேதமாக்கப் பட்டுள்ளமை, எமது உயிரிழந்த மக்களை நினைவு கூரும் உரிமையை அவமதிப்பதாகவே உள்ளது. இது ஒரு வெட்கக் கேடான மனித குலத்துக்கு எதிரான செயல்பாடு.

உலகில் உள்ள எவ்வகையான வலிமை பொருத்திய இராணுவத்தாலும் சின்னங்களை அழித்தாலும் மக்கள் மனதில் இருக்கும் சம்பவங்களையும் நினைவுகளையும் அழிக்க முடியாது. இந்த காட்டுமிராண்டித்தனமான செயலை ஆத்திரத்துடனும், மனவேதனையுடனும், விரக்தியுடனும் தமிழ் மக்களின் பிரதிநிகளாகிய நாம் பதிவு செய்கிறோம்.

நினைவேந்தல்கள் தொடர்பாக அண்மையில் ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கும் மனித உரிமைக்கும் எதிரான இந்த விடயத்தை ஆவணப் படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்" என இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதில், தமிழ் மக்கள் தேசிய கூட்டணி தலைவரும் எம்.பியுமான சி. வி. விக்னேஸ்வரன், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் எம்.பியுமான மனோ கணேசன், தமிழ் தேசிய கூட்டமைப்பின் எம்.பிக்களான செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், எம். ஏ. சுமந்திரன், கோ. கருணாகரம் (ஜனா), சி. சிறிதரன், ஐ. சாள்ஸ் நிர்மலநாதன், எஸ். வினோநோகராதலிங்கம் சா. இராச மாணிக்கம், த. கலையரசன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் எம்.பிக்களான இராதாகிருஷ்ணன், எம். வேலுகுமார் ஆகியோர் ஒப்பமிட்டுள்ளனர்.

இதேசமயம், தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எம்.பியுமான இரா.சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர் திகாம்பரம் ஆகியோர் சுகவீனம் காரணமாக பாராளுமன்றத்துக்கு சமூக மளிக்காமையால் அவர்கள் ஒப்பம் பெறப்படவில்லை. இருப்பினும் அவர்களுக்கும் இதில் உடன்பாடு உண்டு என்ற நிலையில் இக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## வாக்களிப்பில்...

பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்றுமுன்தினம் அவர்கள் இருந்த போதிலும், வாக்கெடுப்பின்போது சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை.

எந்த முடிவை எடுத்தாலும் 5 பாராளுமன்ற உறுப்பினர்களும் தலைமைத்துவத்துக்குக் கட்டுப்பட்டு ஒரே முடிவை எடுக்க வேண்டும் என்று கடந்த புதன்கிழமை நடைபெற்ற கட்சியின் உயர்பீடக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

அதன் பின்னரே பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐவரும் கலந்துரையாடி, வாக்கெடுப்பில் கலந்துகொள்வதில்லை என்ற முடிவை எடுத்தனர் எனவும் அவர் கூறினார்.

கொழும்புத் துறைமுக நகர சட்ட மூலத்தில் சாதகங்களும் பாதகங்களும் காணப்படுவதால் நடுநிலை வகிக்க வேண்டும் எனக் கட்சி எடுத்த தீர்மானத்துக்கு ஏற்ப வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பைஸல் காசிம் தெரிவித்தார்.

இதேவேளை, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உறுப்பினர்கள் நேற்று முன்தினம் நடைபெற்ற வாக்கெடுப்பில் இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர்.

கட்சியின் தலைவர் ரிஷாத் பதியுதீன், முஷாரப் முதுநபீன் ஆகியோர் துறைமுக நகர சட்ட மூலத்துக்கு எதிராக வாக்களித்த போதிலும், அந்த அணியைச் சேர்ந்த அலி ஷப்ரி ரஹீம் மற்றும் இஷாக் ரஹ்மான் சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். (இ)

## குடத்தனையில்...

பெற்றது. சம்பவத்தில் துன்னாலையைச் சேர்ந்த ஒருவரே கைதுசெய்யப்பட்டவராவார். தப்பித்த ஏனைய இருவரையும் கைது செய்யப் பொலிஸார் நடவடிக்கைகளை எடுத் துள்ளனர். அவர்கள் பயணித்த வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளது.

மணலை ஏற்றியவாறு வந்த ஹன்டர் வாகனம் விசேட அதிரடிப் படையின் கட்டளையை மீறி சென்றபோது அவர்கள் அதன் ரயரை குறிவைத்து துப்பாக்கியால் சுட்டனர். இதில், அந்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியது. அதில் சென்றவர்கள் தப்பித்த நிலையில் ஒருவர் மட்டும் கைது செய்யப்பட்டார்.

## நேற்றிரவு முதல்...

ளது. நேற்றிரவு 11 மணி முதல் எதிர்வரும் 25ஆம் திகதி அதிகாலை 4 மணி வரையிலும், அதனைத் தொடர்ந்து 25ஆம் திகதி இரவு 11 மணி முதல் 28ஆம் திகதி அதிகாலை வரையிலும் முழு நேரப் பயணக் கட்டுப்பாடு விதிக்கப்படவுள்ளது.

இந்த காலப்பகுதியில் அத்தியாவசிய சேவையில் ஈடுபடுவோருக்கும், வைத்திய சாலைகளுக்கு அவசர நோயாளிகளைக் கொண்டு செல்வோரையும் தவிர வேறு எவருக்கும் வீடுகளை விட்டு வெளியேற முடியாது என்று பொலிஸார் அறிவித்துள்ளனர். (இ)

## சனக்கூட்டத்தால்...

தடை நடைமுறைக்கு வந்தது. இந்தத் தடை ஒரு வாரத்துக்கு நீடிக்கும் நிலையில், நடுவில் செவ்வாய்க்கிழமை மட்டும் தளர்த்தப்பட்டு அன்றிரவே மீண்டும் பயணத் தடை நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்தக் காலப்பகுதியில் அத்தியவாசிய சேவைகளை மட்டுமே முன்னெடுக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இதனால் பொருள் கொள்வனவுக்காக பெருமளவு மக்கள் யாழ். நகரப் பகுதியில் திரண்டனர்.

இதேபோன்றே, யாழ்ப்பாணத்தின் முக்கிய நகர்களான நெல்லியடி, பருத்தித்துறை, சுன்னாகம், சங்கானை போன்றவற்றிலும் மக்கள் பெருமளவில் கூடினர். இந்நிலைமையே வடக்கு மாகாணத்தின் முக்கிய நகரங்கள் உட்பட நாடு முழுவதும் காணக்கூடியதாக இருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-03)

## வடக்கில் 80...

பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வு கூடங்களில் ஆயிரத்து 232 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டன.

இதில், யாழ்ப்பாணத்தில் 41 பேருக்கும், கிளிநொச்சியில் 25 பேருக்கும், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் தலா 6 பேருக்கும், மன்னாரில் இருவருக்குமாக 80 பேருக்கு நேற்று தொற்று அடையாளம் காணப்பட்டது. (ஐ- 3)

## மேலும் 3,538...

பெறுபவர்களின் எண்ணிக்கை 31 ஆயிரத்து 875 ஆக அதிகரித்துள்ளது.

அத்தோடு கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 25 ஆயிரத்து 360 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

## 8 மாத கர்ப்பவதியை...

செல்ல வேண்டிய இக்கட்டான நிலை வட்டுக்கோட்டை கொரோனா சிகிச்சை மைய நிர்வாகத்துக்கு ஏற்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

நேற்றிரவு இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது:

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 8 மாத கர்ப்பவதி பெண் ஒருவர் கொரோனா தொற்றாளியாக இனங் காணப்பட்டார்.

இவ்வாறு கர்ப்பவதி ஒருவர் தொற்றாளியாக அடையாளம் காணப்பட்டால் அவர் வைத்தியசாலையிலேயே சேர்க்கப்பட வேண்டும் என்று சுகாதார அமைச்சின் சுற்றுநிருபம் கூறுகின்றது. ஆனால், உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினர் எட்டு மாத கர்ப்பவதி பெண்ணை இரவு 8. 30 மணியளவில் வட்டுக்கோட்டை கொரோனா சிகிச்சை நிலையத்தில் கொண்டு சென்று இறக்கிவிட்டு உடனேயே அங்கிருந்து சென்றுள்ளனர்.

இது தொடர்பில், வட்டுக்கோட்டை கொரோனா சிகிச்சை மையத்துக்கும் எந்த முன்னறிவித்தலும் வழங்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது.

இதேவேளை, வட்டுக்கோட்டை சிகிச்சை மையத்திற்கு இரவு வேளைகளில் கொரோனா நோயாளிகள் அழைத்துச் செல்லப்படுகின்றனர். இதனால், அவர்கள் பல சிரமங்களுக்கு முகங்கொடுக்க நேரிடுகின்றனர் என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

## பொதுமக்களுக்குப்...

நாடு முழுவதும் பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக கொரோனாத் தடுப்புச் செயலணிக்கும் ஜனாதிபதிக்கும் இடையே நேற்றுக் காலை விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது பயணக் கட்டுப்பாடுகள் அமுலில் இருந்தாலும் தொழிற்சாலைகளைத் தொடர்ந்தும் நடத்திச் செல்லவும், மருந்தகங்களைத் திறந்து வைத்திருக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

அத்துடன் பேக்கரி உற்பத்திகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ளவும், அவற்றை மக்களுக்கு விநியோகிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்க அனுமதிக்குமாறும், அத்துடன், கப்பல் பொருட்களை விநியோகிக்கும் நிறுவனங்களை திறந்து வைத்திருக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி, அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலின்போது, அத்தியாவசியப் பொருட்களை விநியோகிப்பதற்கு பிரதேச செயலாளர் ஊடாக அனுமதிப் பத்திரத்தை விநியோகிக்கவும், வீதிச் சோதனை நடவடிக்கைகளுக்காகப் பொலிஸாருடன் இராணுவத்தையும் இணைத்துக்கொள்ளவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது அரச அதிகாரிகள் மற்றும் பொறுப்புவாய்ந்த தரப்பினர் ஊடக சந்திப்புக்களில் மக்களை அச்சுறுத்தும் வகையிலான கருத்துக்களை வெளியிடுவதற்குப் பதிலாக அது தொடர்பில் தனக்கு அறிவிப்பது பொருத்தமானதாக இருக்கும் என்றும், இதுவரையில் எடுத்த தீர்மானங்களும் இனி எடுக்கும் தீர்மானங்களும் விசேட குழுக்களின் ஆலோசனைகளுக்கமையவே இருக்கும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (இ)

# மரண அறிவித்தல்



## மகாலிங்கம் கணேசபிள்ளை

**பிறப்பு: 25.01.1951**

**இறப்பு: 20.05.2021**

யாழ். அனலைதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும், இந்தியா சென்னையை வதிவிடமாகவும் கொண்ட மகாலிங்கம் கணேசபிள்ளை கடந்த (20.05.2021) வியாழக்கிழமை அன்று சென்னையில் இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணேசபிள்ளை - புனிதவதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற குமாரசாமி - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் பாசமிகு கணவரும், கஜபால், கவிதாஸ், தவநீதன், ஹரிஹரன், சாரூஜா, காலஞ்சென்ற அஸ்வின் ஆகியோரின் அன்புத் தந்தையும், சாரங்கன், பவதாரிணி, துஷியானி, மைதிலி ஆகியோரின் அன்பு மாமனாரும், நிதுஷன், தினேஷ், காலஞ்சென்ற ஐங்கரன், பவித்திரா, சுஜித்திரா, தனிஷா, சித்தாரா, அரசன், ஆவலினா, வியன், அதீரன், ஆலியா, ஆதாரன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற அரசரெத்தினம், லெட்சுமி, நீதிராஜா, நடராஜா, கருணாகரன், பஞ்சலிங்கம், பஞ்சாட்சரம், பாலசூரியன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சிவபாதசுந்தரம், திவாகரி, கதிர்மணி, சாந்தினி, யாழினி, சுதர்சினி, அனுஷா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், சிவானந்தம், பத்மாவதி, ஞானசேகரன், உதயகுமாரி, ஞானேஸ்வரன், சந்திரசேகர், விஜயகுமாரி, பிரேம் ஆகியோரின் அன்பு அத்தானும், பரமேஸ்வரி, யோகராசா, காலஞ்சென்ற கலைமதி, காண்டீபன், தீபா, அமுதா, செல்வராசா ஆகியோரின் அன்புச் சகலனும், ரம்யா, திவ்யகன், தினஜா, சயீரன், அனுஜா, கீர்த்திகா, ஜெகதா, பூங்கலை, பிரியங்கா, நிதுஷா, அச்சுதன், தமிழினி, சாய்ரதா, விசாலினி, தந்தன், ஜதிநிலா, நிஷாந்த், S.நிதுஷன், அறந்தான் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், துதிராஜ், துசிதா, அகில்ராஜ், தனுஜா, அமல்ராஜ், ஸ்ரெபனி, தாவரஞ்சனி, யார்மிளா, தர்ஷினி, சுபாஷினி, சிவரூபன், கீதா, பதுமிலன், கஸ்வினி, பிரகாஷினி, பிரவீன், உஷா ஆகியோரின் பாசமிகு பெரிய மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை கடந்த (20.05.2021) வியாழக்கிழமை அன்று அவரது இல்லத்தில் இடம்பெற்று இந்தியா, சென்னை, போரூரில் உள்ள இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு:**

**கஜபால் - மகன் +16476404050**

ஈழநாடு
Eelanadu
22.05.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், வைகாசி 08

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# ராஜபக்ஷக்களின் கணக்கு

கொழும்பு துறைமுக நகர சட்டமூலம் நிறைவேறியிருக்கின்ற நிலையில், அதுதொடர்பான எதிர்ப்புக்கள் பெறுமதியற்றுப்போயிருக்கின்றன. ஆரம்பத்தில் அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட சில விடயங்கள் நீக்கப்பட்டே தற்போது, குறித்த கொழும்பு நகர பொருளாதார ஆணைக்குழுவுக்கான சட்டமூலம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. கொரோனா நெருக்கடி, அரசாங்கத்தை பொறுத்தவரையில் சாதகமான ஒன்றாகவே இருந்திருக்கின்றது. தற்போதைய சூழலில் பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளை எதிரணியினர் செய்யமுடியாது. இந்த நிலைமையை அரசாங்கம் சாதகமாக பயன்படுத்திக்கொண்டிருக்கின்றது.

கொரோனா பெருந்தொற்றின் இரண்டாம் அலையானது, இலங்கையை பெரியளவில் தாக்கிவருகின்றது. ஒரு நாளுக்கு சராசரியாக 25இற்கு மேற்பட்டவர்கள் இறக்கின்றனர். இந்த நிலைமை இன்னும் மோசமடையலாமென்றே சுகாதார துறை நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். பொதுவாக, தேசியளவில் ஏற்படும் நெருக்கடிகளை அரசாங்கத்தினால் சமாளிக்க முயாமல்போனால், சதாதாரண மக்களின் கோபம் அரசாங்கத்தின்மீதே திரும்பும். எதிரணியினருக்கு நிலைமை சாதகமாகும். அரசாங்கம் அவ்வாறானதொரு நெருக்கடியையே தற்போது எதிர்கொண்டிருக்கின்றது.

நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் கொரோனாவின் தாக்கம், அரசாங்கத்தின் செல்வாக்கையும் மெதுவாக சரித்துக்கொண்டிருக்கின்றது. இதனை, அரசாங்கத்தின் முதுகெலும்பாக இருக்கும் ராஜபக்ஷக்கள் அறியாமல் இருக்கப்போவதில்லை. இதனை சமாளிக்கும் புதிய உத்திகள் தொடர்பிலேயே அவர்கள் சிந்திக்கின்றனர். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாமல், கொழும்பு நகர சட்ட மூலத்தை நிறைவேற்றுவதில் முழுமூச்சுடன் செயற்பட்டு, வெற்றிபெற்றிருக்கின்றனர். இதன்மூலம், நாடு பொருளாதார ரீதியில் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை பெருமளவில் சமாளிக்கமுடியுமென்பதே அவர்களது கணிப்பாகும்.

கொழும்பு நகரம் செயற்படத் தொடங்கும்போது, பெருமளவு சீன முதலீடுகளும், சீனாவின் நட்புநாடுகளின் முதலீடுகளும் இலங்கைக்குள் வருமென்றே, ராஜபக்ஷக்கள் எண்ணுகின்றனர். இதன்மூலம், கொரோனாவினால் சரிந்துகிடக்கும் நாட்டின் பொருளாதாரத்தை நிமிர்த்தியெடுக்க முடியுமென்பதே அவர்களது எண்ணம். மேற்குல நாடுகளின் முதலீடுகள் கிடைக்காமல் போனாலும்கூட, சீனாவைக் கொண்டு தங்களால் சமாளிக்க முடியுமென்றே கணிக்கின்றனர். கொழும்பு நகரம், சட்டவிரோத பணச்சலவை மையமாக மாறிப் போகலாமென்று அமெரிக்க தூதுவர் குறிப்பிட்டிருந்தார். அமெரிக்க தூதுவரின் கருத்துக்கள் மேற்குலக முதலீட்டாளர்களை சிந்திக்கத் தூண்டும்.

தற்போதைய சூழலில் அரசாங்கத்தின் நம்பிக்கையாக இருப்பது சீனா மட்டுமே! சீனாவின் பொருளாதார உதவிகளைக்கொண்டு தங்களால் மீண்டெழ முடியுமென்றே ராஜபக்ஷக்கள் கருதுகின்றனர். இது, ஒரு வகையில் செய் அல்லது செத்துமடி உபாயம்தான். ஒருவேளை, எதிர்பார்ப்பதுபோன்று முதலீடுகளை ஈர்க்க முடியாமல்போனால், அது ராஜபக்சக்களின் வீழ்ச்சிக்கு வழிவகுத்துவிடும் ஆனால் வெற்றியடைந்தால், தற்போது நாடு எதிர்கொண்டிருக்கின்ற நெருக்கடியிலிருந்து இலகுவாக மீண்டுகொள்ளமுடியும்.

பொருளாதார முன்னேற்றங்கள்மூலம், மக்களின் அதிருப்தியை போக்கிவிடலாம் என்பதே ராஜபக்ஷக்களின் கணக்கு. ஏற்கனவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தமிழ் மக்களின் பிரச்னை அரசியல் ரீதியானதல்ல. மாறாக, அது பொருளாதார ரீதியானதென்று குறிப்பிட்டதை இங்கு நினைவுகொள்ளலாம். ராஜபக்ஷக்கள் அனைத்தையும் பொருளாதார விடயங்கள்மூலம் கையாளமுடியுமென்று எண்ணுபவர்களாவர். அந்த அடிப்படையில்தான், கொழும்பு நகரத் திட்டத்தை தங்களுக்கான வரப்பிரசாதமாக நோக்குகின்றனர்.

# ராஜீவ் காந்தி படுகொலையின் 30ஆவது ஆண்டு

- அலசுவது இராஜதந்திரி -

**1991**ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி, இந்தியாவுக்கு ஒரு பேரிழப்பைக்கொடுத்த நாளாக அமைந்திருந்தது. தேர்தல் பிரசார கூட்டமொன்றுக்காக தமிழகத்தின் சிறிபெரும்புதூருக்கு வந்திருந்தபோது இந்திய அரசியலின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கியவரும் 1987ஆம் ஆண்டு பிரதமராக இருந்தபோது இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை கொண்டு வந்து, வடக்கு-கிழக்கு தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்ற முன்வந்தவருமான ராஜீவ் காந்தி கொல்லப்பட்டு, 30 ஆண்டுகள் நேற்றுடன் பூர்த்தியாகியிருந்தன.

ஒரு பரந்து விரிந்த அரசியல் கண்ணோட்டத்துடன் இந்தியாவை இலங்கையின் வடக்கு-கிழக்கு தமிழர் பிரச்னையோடு சம்பந்தப்படுத்தி பார்க்கும்போது, ‘வளர்த்த கடா மார்பில் பாய்ந்த’ கதையாகவே ராஜீவ் காந்தி கொலைசெய்யப்பட்ட சம்பவம் விளங்கியிருந்தது.

1983ஆம் ஆண்டு ஜூலை இனக்கலவரத்துக்குப் பின்னரே இந்தியாவின் கரிசனை இலங்கை தமிழர்மீது வெகுவாக திரும்பியிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட, அனைத்து தமிழ் ஆயுத போராட்டக் குழுக்களுக்கும் இந்தியா தமிழகத்தில் அடைக்கலம் வழங்கியிருந்தது.

**இந்தியாவில் அடைக்கலம்**

அத்துடன், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான வடக்கு-கிழக்கு தமிழர்களுக்கும் இந்தியா தமிழகத்தில் அடைக்கலம் அளித்திருந்தது. இந்தியாவின் தமிழகம் இலங்கையின் வடமாகாணத்தோடு பூகோள ரீதியாக அண்மித்த நிலையில் இருந்திராவிடில், இலங்கைத்தமிழரது ஆயுதப்போராட்டங்கள் ஆரம்பித்த வேகத்திலேயே முடிவுக்கு வந்திருக்கும். ஆனால் ஆயுத போராளிகள், மிதவாத அரசியல் வாதிகள் மற்றும் அப்பாவி அகதித் தமிழர்கள் என்போருக்கு அடைக்கலம் வழங்கி, இந்தியா இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு கவசமாகவே விளங்கியிருந்தது.

ஆனால், இந்தியாவின் காலமறிந்த உதவிக்கு நன்றியறிதலோடு அதன் வழிகாட்டல்களைப் பின்பற்றுவதற்குப் பதிலாக, அந்நாட்டின் ஒரு முக்கிய அரசியல் வாரிசான ராஜீவ் காந்திக்கு வேட்டு வைத்ததன்மூலம் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது தலையில் தாமே மண்ணைவாரிப் போட்டுக்கொண்டதுடன், வடக்கு-கிழக்கு தமிழர்கள்மீது இந்தியாவில் இருந்து வந்த நல்லபிமானத்தையும் தவிடுபொடியாக்கியிருந்தனர்.

**ராஜீவ்-பிரபாகரன் சந்திப்பு**

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை கொழும்பு வந்து கைச்சாத்திடுவதற்கு முன்னர், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனை புதுடில்லிக்கு அழைத்து, இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் குறித்து விரிவான விளக்கத்தை ராஜீவ்காந்தி பிரபாகரனுக்கு வழங்கியிருந்தார். அத்துடன், இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஏற்படுத்தப்படுகின்ற மாகாணசபை நடவடிக்கைகளுக்கு இந்தியா உறுதுணையாக இருக்கு



மெனவும் உறுதியளித்திருந்தார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் உருப்பெற்றுக்கொண்டிருந்த தறுவாயில் இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன இந்தியாவின் முன்னைய அரசியல்வாதிகளோடு குறிப்பாக, ராஜீவ் காந்தியின் தாயார் இந்திரா காந்தி மற்றும் ராஜீவின் பாட்டனார் ஜவஹர்லால் நேரு ஆகியோருடன் தாம் கொண்டிருந்த நெருக்கமான தொடர்புகளை ராஜீவ் காந்திக்கு எடுத்துக்கூறி, தமது தரப்பு நிலைப்பாடுகளை பலப்படுத்தும் சூழல் பலமடைந்திருந்தது. இத் தருணத்திலேயெ தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் அ. அமிர்தலிங்கம், தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் மு. சிவசிதம்பரம் ஆகியோர் திருச்சிராப்பள்ளியிலிருந்து புதுடில்லிக்கு விசேட விமானமூலம் ராஜீவ்காந்தியுடன் பயணித்து, இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் வடக்கு-கிழக்கு தமிழர்கள் தொடர்பாக அவருக்கு விளக்க மளித்திருந்தனர்.

இதன்பின்னரே இலங்கையின் வடக்கு-கிழக்கு தமிழர்கள் குறித்த தெளிவான கண்ணோட்டத்தை பெற்றுக்கொண்டதன் அடிப்படையில், தாமே முன்னின்று அன்றைய இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவோடு இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் ராஜீவ் காந்தி கைச்சாத்திட்டிருந்தார்.


அத்துடன், இலங்கை -இந்திய ஒப்பந்தத்தின் அமுலாக்கத்தையும் உறுதி செய்ய இந்திய அமைதிப்படையையும் ராஜீவ்காந்தி இலங்கையின் வடக்கு-கிழக்குக்கு அனுப்பி வைத்திருந்தார்.

**ராஜீவுக்கு ஏற்பட்ட அபசகுனம்**

ஆனால், இலங்கைக்கு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட 1987ஆம் ஆண்டு கொழும்பு வந்தமை அவருக்கு ஓர் அபசகுனமாகவே அமைந்திருந்தது. ஏனெனில், அவருக்கு அணிவகுப்பு மரியாதையை வழங்கிய கடற்படை அணியிலிருந்த சிப்பாய் ஒருவர், தனது ரைபிள் துப்பாக்கியால் ராஜீவ் காந்தியை தாக்கியிருந்தார்.

கொழும்பில் ராஜீவ்மீது நடத்தப்பட்ட கடற்படை வீரரின் தாக்குதலே பின்னாளில் அவரது உயிருக்கு 1990ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகளால் உலைவைக்கும் நிகழ்வுக்கு கட்டியம் கூறுவதாகவும் அமைந்திருந்தது. இந்தியாவின் ஒரு பிரபலம் மிக்க அரசியல் வாரிசாக விளங்கிய ராஜீவ் காந்தியை இலங்கையிலிருந்து சென்று கொலை செய்தமை இலங்கையின் வடக்கு-கிழக்கு தமிழர் அரசியலில் ஒரு கறைபடிந்த வரலாற்றை ஏற்படுத்தியதாகவும், இலங்கைத் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றும் சந்தர்ப்பங்களை மழுங்கடித்ததாகவும் காணப்படுகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
புதிய நபர்களிடம் தனிப்பட்ட விஷயங்களைப் பேச வேண்டாம். குடும்பத்தினருக்கு தேவை யான விஷயங்களை செய்து முடிப்பீர்கள். சுறுசுறுப்புடன் செயல்பட்டு அன்றாட வேலைகளை முடிப்பீர்கள்.

**இடபம்**
பல நாள் விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ் வீர்கள். உறவினர்களுடன் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். புதிய விஷயங்களில் ஈடுபட்டு அதைக் கற்றுக் கொள்வீர்கள்.

**மிதுனம்**
தொட்டதெல்லாம் வெற்றியாகும். உடல்நலத்தில் அக்கறை தேவை. உற்சாகமான நாள். சகோதரர் களுக்கு உதவுவீர்கள். முன்பு கட்டுக்கடங்காமல் இருந்த செலவுகள் குறையும்.

**கடகம்**
வீட்டில் செய்யும் வழிபாட்டால் மனதில் மகிழ்ச்சி கூடும். உதவுவதாகச் சொன்னவர்கள் வாக்கைக் காப்பாற்றுவார்கள். செலவுகள் கூடும். புதிய அறிமுகங்கள் நெருக்கமாவார்கள்.

**சிம்மம்**
உறவினரால் நன்மை கிட்டும். முனைந்து உழைத்து நலம் காண்பீர்கள். வாய்ப்புகள் கை கூடிவரும். சொத்து பிரச்னை அகலும். வெற்றிக் கான வழியைக் கண்டறிவீர்கள். யோகமான நாள்.

**கன்னி**
வாழ்க்கைத்துணையின் முன்னேற்றம் கண்டு மகிழும் நாள். எடுத்த முயற்சிகள் கைகூடுவதற் கான அறிகுறிகள் தெரியும். பணியாளர்களுக்கு புகழ் கூடும். உதவிகள் கிடைக்கலாம்.

**துலாம்**
கலகலப்பான நாள். பதவி உயர்வு கிடைக்கக் கூடும். திருமணம் சம்பந்தமாக எடுத்த முயற்சி யில் வெற்றி உண்டு. தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள். குழப்பங்கள் தோன்றி மறையும்.

**விருட்சிகம்**
நினைத்தது நிறைவேறும். அவசியமான பொருட் களை வாங்குவீர்கள். பிள்ளைகள் பற்றிய விருப்ப மும், கனவும் நிறைவேறும். விரைந்து தீர்மா னங்கள் எடுத்து அதில் வெற்றி காண்பீர்கள்.

**தனுசு**
பாராட்டை எதிர்பார்க்க வேண்டாம். பொழுது போக்கு அதிகமாகும். ஆன்மிக நாட்டம் கூடும். தொழிலில் ஏற்ற, இறக்கம் காணப்படும். பரபரப் பான நாள். வெளிநாட்டிலிருந்து நல்ல செய்தி வரும்.

**மகரம்**
எதிர்பார்த்த விஷயம் இன்று நல்லபடியாக நிறை வேறும். எதையும் சமாளிக்கும் திடம் இருக்கும். மகிழ்ச்சியான நாள். திருமண வாய்ப்பு கண் ணுக்குத் தென்படும். யோகமான நாள்.

**கும்பம்**
எந்த விஷயத்திலும் கவனம் தேவைப்படும் நாள். எதிர்பார்த்த பணத்தைக் கொடுக்காமல் அவகாசம் கேட்பார்கள். குடும்பத்தில் ஒருவர் மனம் மகிழும் படி நடப்பார்

**மீனம்**
ஏற்ற, இறக்கமான நாள். சமீபத்தில் ஏற்பட்ட பிரச்னை தீரும். பெண்களால் ஏற்பட்ட தொல் லையை சமாளித்து வெல்வீர்கள். முயற்சியைத் தீவிரமாக்கிப் பணிகளை முடிக்க வேண்டிவரும்.

# 7 பேர் விடுதலையில் காங்கிரஸ் கட்சிக்கு உடன்பாடு இல்லை

## தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி

சென்னை, மே 22

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தொடர்புடைய 7 பேர் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதில் காங்கிரஸ் கட்சிக்கு உடன்பாடு இல்லை என தமிழக காங்கிரஸ் தலைவர் கே. எஸ்.அழகிரி தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 30 ஆண்டுகளாக சிறையில் வாடும் 7 பேரையும் விடுதலை செய்ய வேண்டும் என்று ஜனாதிபதிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதி உள்ளார்.

இது குறித்து தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி கூறியதாவது:

"7 பேர் விடுதலை தொடர்பாக ஜனாதிபதிக்கு முதல்-அமைச்சர் ஸ்டாலின் எழுதிய கடிதத்தை நாங்கள் ஆதரிக்கவில்லை. தமிழர்கள் என்ற அடிப்படையில் 7 பேரை விடுதலை செய்வதில் காங்கிரஸ் கட்சிக்கு உடன்பாடு இல்லை" என்றார்.

இதேவேளை, ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில், "7 பேரையும் விடுதலை செய்ய 9.9.2018 அன்று தமிழ்நாடு அமைச்சரவை நிறைவேற்றி அனுப்பியுள்ள தீர்மானத்தை உடனடியாக ஏற்றுக் கொண்டு ஆணை பிறப்பிக்க வேண்டும்" என்று ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். ஜனாதிபதி ராம்நாத் கோவிந்துக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எழுதிய கடிதத்தை தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர். பாலு ஜனாதிபதி அலுவலகத்தில் நேரில் அளித்துள்ளார்.



# எழுவர் விடுதலை குறித்து தமிழக அமைச்சரவை மீண்டும் தீர்மானம்

## நிறைவேற்ற வேண்டும் என்கிறார் திருமாவளவன்

சென்னை, மே 22

பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேர் விடுதலை தொடர்பாக, தமிழக அமைச்சரவை மீண்டும் தீர்மானம் இயற்ற வேண்டும் என, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், மக்களவை உறுப்பினருமான தொல். திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக, திருமாவளவன் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

"பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேர் விடுதலை தொடர்பாக குடியரசுத் தலைவர் விரைந்து முடி வெடுக்குமாறு தமிழ்நாடு அரசின் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு இந்தப் பிரச்சினையில் காட்டியிருக்கும் அக்கறையைப் பாராட்டுகிறோம்.

ஆனால், அதே நேரத்தில் மாநில அதிகாரத்தை விட்டுக் கொடுக்காமல் இந்த விடுதலையைச் சாத்தியப்படுத்துவதற்கு தமிழக அரசு முன்வர வேண்டும். அதற்கு மீண்டும் அமைச்சரவையில் தீர்மானம் இயற்றி ஆளுநருக்கு அனுப்ப வேண்டும் என்று வேண்டுகிறோம்.

7 பேரையும் விடுவிப்பதாக மீண்டும் அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்ப வேண்டும். அவரிடமிருந்து ஒப்புதல் வரும் வரை அவர்கள் 7 பேரையும் பரோலில் விடுவிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்".

இவ்வாறு திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

# தமிழக ஊரடங்கு நீட்டிக்கப்படுமா? முதலமைச்சர் இன்று ஆலோசனை!

சென்னை, மே 22

தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள முழு ஊரடங்கு நாளை மறுதினம் 24ஆம் தேதியுடன் நிறைவடையும் நிலையில், தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் இன்று சனிக்கிழமை மருத்துவ நிபுணர்களுடன் ஆலோசனை மேற்கொள்ள உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

தமிழகத்தில் கொரோனா தொற்று பரவல் 2 ஆவது அலை கோரத்தாண்டவம் ஆடிவரு கிறது. ஆஸ்பத்திரிகள் கொரோனா தொற்று நோயாளிகளால் நிரம்பி வழி கிறது. ஆக்சிஜன் தட்டுப்பாடும் நிலவி வருகிறது. கொரோனா தொற்றால் உயிர் இழப்புகளும் அதிகரித்து வருகிறது.

இந்தநிலையில், கொரோனா தொற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக கடந்த ஏப்ரல் 20 ஆம் திகதி முதல் இரவு நேர ஊரடங்கு மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. எனினும், கொரோனா தொற்றின் வேகம் குறையாத காரணத்தால் கடந்த 10 ஆம் திகதி முதல் வரும் 24 ஆம் திகதி வரை முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. அப்போது, மளிகை, காய்கறி, இறைச்சி, மீன் கடைகள் நண்பகல் 12 மணி வரை மட்டும் திறந்திருக்க அனுமதி அளிக்கப்பட்டது.

பின்னர், ஊரடங்கு மேலும் தீவிரப்படுத்தப்பட்டு, கடந்த 15 ஆம் திகதி முதல் மளிகை, காய்கறி, இறைச்சி, மீன் கடைகள் காலை 6.00 மணி முதல் காலை 10.00 மணி வரை விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.



இந்தநிலையில். தமிழ்நாட்டில் நேற்று ஒரே நாளில் 35,579 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். 397 பேர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில், முதலமைச்சர் ஸ்டாலின் இன்று மருத்துவ நிபுணர்களுடன் ஆலோசனை மேற்கொள்ள உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழகத்தில் முழு ஊரடங்கு நீட்டிக்கப்படுமா? என்பது குறித்தும் இன்று முடிவு எடுக்கப்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நிலைமை மோசம் 14 நாட்களுக்கு நாட்டை முடக்குக!

## இலங்கை மருத்துவர் சங்கம் கோரிக்கை

**கொழும்பு, மே 22**

**இலங்கை முழுவதும் 14 நாட்களுக்கு ஊரடங்கு உத்தரவை பிறப்பிக்குமாறு இலங்கை மருத்துவர் சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன, அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.**



கொழும்பில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்த கோரிக்கையை முன்வைத்தார்.

" கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவதால் சுகாதார கட்டமைப்பு பெரும் சவாலை எதிர்கொண்டுள்ளது. அரசாங்க வைத்தியசாலைகளில் தொற்றாளர்கள் நிரம்பியுள்ளனர். ஐ.சி.யூக்களிலும் சிகிச்சை பெறுகின்றனர். இதனால் ஏனைய நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதிலும் நெருக்கடி நிலை உருவாகியுள்ளது.

சமூகத்தில் மேலும் பல தொற்றாளர்கள் இருக்கலாம். எனவே, தற்போது நடைமுறையில் உள்ள மாகாணங்களுக்கிடையிலான பயணத்தடை, தேசிய அடையாள அட்டை முறைமை, மூன்று நாட்கள் குறுகிய பயணக்கட்டுப்பாடு போன்றவற்றால் வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்த முடியாது.

எனவேதான் 14 நாட்களுக்கு கடும் பயணக்கட்டுப்பாடுகளை அல்லது ஊரடங்கு சட்டத்தை பிறப்பிக்குமாறு கேட்கின்றோம். அதன் பின்னர் நிலைமையை மீளாய்வு செய்து கட்டம், கட்டமாக ஊரடங்கை தளர்த்தலாம்." - என்றார்.

# பல்கலைகளுக்கு மாணவர் அனுமதி விண்ணப்பங்கள் நேற்று முதல் ஏற்பு

கொழும்பு, மே. 22

2020/2021 கல்வி ஆண்டில் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் நேற்று முதல் ஜூன் 11ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அறிவித்துள்ளது.

2020 க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்கள் விண்ணப்பங்களை இணையம் மூலம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

https://eugc.ac.lk/ugc_handbook/ என்ற முகவரியில் கையேட்டைப் பெற்றுக்கொள்ள முடியும்.

நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பத்தின் புகைப்படத்தை அச்செடுத்து, அதில் மாணவர்கள் கையெழுத்திட்டு சான்றளிக்கப்பட்ட விண்ணப்பங்களை apply2020@ugc.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரியில் அனுப்ப வேண்டும்.

இந்த ஆண்டு 41 ஆயிரம் 755 மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் சேர்க்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பலாலி வடக்கு கிராம அலுவலர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பலாலி வடக்கு உள்பட்ட மூன்று மாவட்டங்களில் 7 கிராம அலுவலர் பிரிவுகள் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்படுவதாக இராணுவத் தளபதி அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வலி. வடக்கு பலாலி வடக்கு கிராம அலுவலகர் பிரிவு தனிமைப்படுத்தப்படுகிறது. அந்தக் கிராமத்தில் தொற்றாளர்கள் அதிகளவில் இனங்காணப்பட்டுள்ளதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்மடு கிராம அலுவலர் பிரிவும் மொனராகலை மாவட்டத்தில் 5 கிராம அலுவலர் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்படுகின்றன.

# தாழமுக்கம் வலுவடைந்து சூறாவளியாகும் அபாயம்!

கொழும்பு, மே. 22

அந்தமான் கடற்பிராந்தியத்தின் வங்களா விரிகுடாவின் வட கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் எதிர்வரும் நாட்களில் வலுவடைந்து சூறாவளியாக மாறவுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தமான் கடற்பிராந்தியத்தின் வங்காள விரிகுடாவின் வட கிழக்கு பிராந்தியத்தில் உருவாகியுள்ள தாழமுக்கமானது இன்று வலுவடையும் என வளிமண்டலவியல் திணைக்களத்தினால் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அத்துடன், நாளை குறித்த தாழமுக்கமானது மேலும் சக்திமிக்கதாக வலுவடையும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், எதிர்வரும் 24 ஆம் திகதி தாழமுக்கமானது சூறாவளியாக மாற்றமடையும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த சூறாவளி வடமேல் திசையில் பயணித்து, எதிர்வரும் 26 ஆம் திகதியன்று ஒடிசாவை அண்மித்த மேற்கு வங்க கடலை கடக்கும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்றில் இருந்து மறு அறிவித்தல்வரை வங்காள விரிகுடாவின் வட கிழக்கு பிராந்தியத்தில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுப்பட வேண்டாமென அறிவுறுத்தல் விடுக்கபட்டுள்ளது.

மேலும், தற்போதைய நிலையில குறித்த கடற்பிராந்தியங்களில் கடற்றொழிலில் ஈடுப்பட்டுள்ள மீனவர்களை உடனடியாக கரைதிரும்புமாறு கோரிக்கை விடுக்கபட்டுள்ளது.

அத்துடன், கடற்றொழிலாளர்கள் மற்றும் கடல்சார் ஊழியர்கள் இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வெளியிடப்படும் அறிவிப்புகள் குறித்து அவதானமாக செயற்படுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் தென்மேற்கு பிராந்தியத்தில் அடுத்துவரும் நாட்களில் மழையுடனான வானிலை அதிகரிக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதன்படி, மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் 50 மில்லிமீற்றருக்கும் அதிக மழைவீழ்ந்நி பதிவாகும் சாத்தியம் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களில் காற்றின் வேகமானது அதிகரித்து காணப்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியா நகரசபை தமிழரசுவின் உறுப்பினர் பதவியிலிருந்து விலகல்

வவுனியா, மே 22

தமிழரசுக் கட்சியின் வவுனியா நகரசபை உறுப்பினர் ரி.கே.ராஜலிங்கம், தனது பதவியை, நேற்று வெள்ளிக்கிழமை முதல் தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது-

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், தமிழரசுக்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் வவுனியா நகர வட்டாரத்தில் நேரடியாக போட்டியிட்டு வெற்றியடைந்தேன்.

அத்துடன் வெற்றியடைந்தவர்கள் தனது பதவிக்காலத்தின் 2 வருடங்களை, மேலதிக வேட்பாளர்களாக போட்டியிட்டவர்களுக்கு வழங்க வேண்டுமென தமிழரசுகட்சி தீர்மானித்திருந்தது.

இந்நிலையில் எனது பதவிக்காலத்தின் இறுதி வருடத்தை, ஏனையவர்களுக்கு வழங்குவதாக நான் அன்று வாக்குறுதி அளித்தேன். ஆகவே, இன்னுமொருவருக்கு சந்தர்ப்பம் வழங்கும் நோக்குடன், எனது பதவியினை இராஜினாமா செய்வதற்கு தீர்மானித்துள்ளேன்.

மேலும் அது தொடர்பாக கடிதத்தை வவுனியா தேர்தல் திணைக்களத்துக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்க தீர்மானித்துள்ளேன்.

இதேவேளை, தேர்தல் திணைக்களத்தினால், எனது உறுப்புரிமை உத்தியோகபூர்மாக நீக்கப்பட்டுள்ளதாக அறிவிப்பு கிடைக்கு வரை என்னால் முன்னெடுக்கப்பட்டு வரும் அனைத்து அபிவிருத்தி திட்டங்களையும் தொடர்ந்து முன்னெடுப்பேன்.

அத்துடன் நான் சிறந்த முறையில் பணி புரிவதற்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்-என்றார்.

# தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு 10,000 ரூபா பெறுமதியான உணவுப்பொதி

யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாணத்தில் 7251 குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவு பொதி தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாண மாவட்டத்தை பொறுத்தவரை தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணி தொற்றாளர்களுடன் நடமாடியதன் அடிப்படையில் சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தலுக்கு அமைய வீடுகளில் சுயதனிமைப் படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் இடைக்கால நிவாரண உதவியாக அந்த 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப்பொதியை மாவட்ட செயலகத்தின் வழிகாட்டுதலின் கீழ் பிரதேச செய லகங்கள் ஊடாக வழங்கி வரு கின்றோம்.


அதன் அடிப்படையில் யாழ் மாவட்டத்தில் நேற்று வரை சுமார் 7251 குடும்பங்களுக்கு அரசினால் வழங்கப்படும் 10 ஆயிரம் ரூபா பெறுமதி கொண்ட உணவுப்பொதி தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

தொடர்ச்சியாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இந்த உதவி வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டு இருக்கும் காலத்தில் எமக்கு உரிய விவரங்கள் கிடைக்கப்பெற்றவுடன் அவர்களுக் கு அது கிடைக்கும். அதாவது விவரங்கள் கிடைக்கப்பெறுவதன் அடிப்படையிலேயே உதவிப் பொருட்களை வழங்க முடியும்.

இந்த விடயம் தொடர்பில் சகல பிரதேச செயலர் களுக்கும் உரியவறான அறிவுறுத்தல்கள் எம்மால் வழங்கப்பட்டுள்ளன.

எனவே தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கான உதவிகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது -என்றார்.




# தடுப்பூசி கொரோனாவை நிறுத்துமா? செஷெல்ஸ்தீவு தருகின்ற படிப்பினை

**நியூசிலாந்து சிற்சபேசன்**

கொரோனாப் பேரிடர் உலகில் எதிர்பாராத மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது. கொரோனா தொற்றைக் கையாள்வதில் அணுகுமுறைகள் மாறுபடுகின்றன. எல்லைகளை மூடுவது, லொக்டவுன் போன்றவையே ஆரம்பத்தில் முக்கிய வகிபாகத்தைக் கொண்டிருந்தன. அதன் பின்னர், நீண்டகாலத் தீர்வுக்கான தேடல் ஆரம்பமாகியது. அதிலே, தடுப்பூசி முக்கியமாகியது. அதன்பின்னர், தடுப்பூசிக்கான ஓட்டம் ஆரம்பமாகியது. தடுப்பூசி தொடர்பான ஆராய்ச்சிகளும், ஆராய்ச்சி முடிவுகளும் பேசுபொருளாகின. அதேகாலப் பகுதியில், தடுப்பூசிக்கான மூலப்பொருள், உற்பத்தித்திறன் போன்றவற்றைக் கைவசப் படுத்துவதற்கான முயற்சிகள் ஆரம்பமாகின. அதன்பின்னர், தடுப்பூசி உற்பத்தி, விநியோகம், நுகர்வு என்பவற்றை மையப் படுத்திய அரசியல் ஆரம்பமாகியது. ஒவ்வொரு தேசமும் தடுப்பூசியைக் கைவசப்படுத்துவதற்கான முயற்சிகளை முடுக்கிவிட்டன. எவ்வளவு பேருக்குத் தடுப்பூசிகள் வழங்கப்பட்டன, அதிலே தேசாந்திர ரீதியான எண்ணிக்கை என்பவையே தொற்று மேலாண்மையின் அளவுகோல் என்னும் நிலை, இன்றையகாலத்தில், ஏற்பட்டிருக்கின்றது.

அந்தவகையிலே, ஒரு லட்சத்திற்கும் குறைவான சனத்தொகையைக் கொண்ட செஷெல்ஸ்தீவு அறுபது விழுக்காடு வரையானவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்கிப் பரவலான கவனத்தை ஈர்த்தது. தடுப்பூசி வழங்குவதில் முன்னிலையிலுள்ள பிரித்தானியா, அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகளோடு ஒப்பிடக்கூடிய நிலை செஷெல்ஸ்தீவுக்குக் கிடைத்தது.

இந்துசமுத்திரத்தில், ஆபிரிக்கா கண்டத்தின் கிழக்கிலே 115 வரையான தீவுகளின் கூட்டமே செஷெல்ஸ் ஆகும். அதனுடைய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 70 விழுக்காடு உல்லாசப்பயணத்துறை வழியாகவே கிடைக்கின்றது. அதுவே, மொத்த சனத்தொகையில், 30 விழுக்காடு பங்கினருக்கு வேலைவாய்ப்பையும் வழங்குகின்றது. அதனால், கொரோனாத் தொற்றைக் கையாள்வதில், நிலைபேறான தீர்வை ஏற்படுத்த வேண்டிய அவசியத்தை அங்கு ஏற்படுத்தியது. செஷெல்ஸ் அரசு துரிதமாகச் செயற்பட்டது. சீனத்தயாரிப்பான சினோபார்ம் தடுப்பூசியை ஐக்கிய அரபு அமீரகத்திடமும், அஸ்ட்ரஜெனிக்கா கொவிஷீல்ட் தடுப்பூசியை இந்தியாவிடமிருந்தும் நன்கொடையாகப் பெற்றுக்கொண்டது. 2021 சனவரியிலேயே, செஷெல்ஸ், தடுப்பூசியை வழங்க ஆரம்பித்தது. சனத்தொகையில் அரைவாசிக்கு மேலானவர்களுக்கு, மூன்றுமாத இடைவெளியில், தடுப்பூசியை வழங்கி முடித்திருந்தது.

தடுப்பூசி வழங்கலில் காணப்பட்ட முன்னேற்றத்தினால் நம்பிக்கைகள் துளிர்விட்டன. கொரோனாத் தொற்று எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்தது. அதுவே தேசத்தை ஆசுவாசப்படுத்தியது. சரிந்துபோயிருந்த உல்லாசப் பயணத்துறையை மீட்டெடுத்துவிடவேண்டும் என்னும் உத்வேகத்தை ஏற்படுத்தியது. சுமார் ஓராண்டுக்குப் பின்னர், மார்ச் 25ல், எல்லைக்கட்டுப்பாடுகளைத் தளர்த்தியது. உல்லாசப்பயணிகளை வரவேற்கத் தயாராகியது. தடுப்பூசி ஏற்றிய சான்றிதழுடன், தொற்று இல்லை என்பதைப் பயணிப்பதற்கு 72மணிநேரத்துக்கு முன்னர் பெற்ற பிசிஆர் சான்றிதழுடன் உறுதிப்படுத்தக்கூடியவர்கள் கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உட்பட வேண்டியதில்லை என செஷெல்ஸ் அறிவித்தது. அதனைத் தொடர்ந்து உல்லாசப்பயணிகளின் வருகை படிப்படியாக அதிகரித்தது.

கணிசமான அளவில் தடுப்பூசியை ஏற்பாடு செய்தமை, அதனை சீரான முறையில் வழங்கியமை போன்றவற்றில் வளர்முக நாடுகளிடையே செஷெல்ஸ் முன்னுதாரணமாகியது. ஏப்ரல் மாதமளவில் தொற்று எண்ணிக்கை அதிகரிப்பதான தோற்றப்பாடு ஏற்பட்டபோதுகூட, தடுப்பூசி வழங்கலில் கிடைத்த முன்னேற்றம் நம்பிக்கைகளை தக்கவைக்க உதவியது. ஆனாலும், மே மாதத்தில் தொற்று எண்ணிக்கை உச்சம் தொட்டபோது சுதாகரித்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலைக்குச் செஷெல்ஸ் தள்ளபட்டது. அதனால், லொக்டவுன் தன்மையினதான கட்டுப்பாடுகளை அறிவித்தது.

செஷெல்ஸின் தினசரி தொற்று எண்ணிக்கை மிகக் குறைவானதாகத் தென்படலாம். ஆனால், மொத்தசனத்தொகையுடன் ஒப்பிடும்போது தொற்று எண்ணிக்கை அச்சமூட்டுவதாக துறைசார் வல்லுனர்கள் கருதுகின்றனர்.

அத்துடன், புதிதாக ஏற்படுகின்ற தொற்றில் மூன்றில் ஒரு பங்கினர் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுக்கொண்டவர்கள் என்பதுவும், மீதமானவர்களில் தடுப்பூசியின் முதலாவது டோசைப் பெற்றுக் கொண்டவர்களும் அநேகர் என்பதையுமே அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் சொல்லுகின்றன. மேற்படி தகவல்கள் உரியவகையில் உறுதிப்படுத்தப் படுகின்ற பட்சத்தில் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வ தேச ரீதியாகவும் அதிர்வுகளை ஏற்படுத்தக் கூடியதாகும்.

கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாத்து கொள்வதற்கு தடுப்பூசியையே பலரும் நம்புகின்றனர். அதனால், தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுகொண்டவர்களும் செஷெல்ஸில் தொற்றுக்கு ஆளாகியிருப்பது அதிர்ச்சியான தகவலாகவே கருதப் படுகின்றது. எது எப்படியாகிலும், தடுப்பூசியின் இரண்டு டோஸ்களும் வழங்கப்பட்ட பின்னரும் தொற்று ஏற்படலாம் என்பதற்கு செஷெல்ஸ் முன்னுதாரணமாகியுள்ளது.

தடுப்பூசியின் இரண்டு டோஸ்களும் வழங்கபட்ட பின்னரும் தொற்று ஏற்படுகின்றமைக்கு பல்வேறு வியாக்கியானங்கள் சொல்லப்படுகின்றன. திரிபடைந்த வைரசினால் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று சொல்லப்படுகின்றது. பல்வேறு வர்த்தகப் பெயர்களில் (பிராண்ட்) தடுப்பூசிகள் உருவாகின்றன அவை ஒவ்வொன்றினதும் செயல்திறன் (எஃபிக்கசி) வெவ்வேறாக இருப்பதுவும் ஒரு காரணமாகச் சொல்லப்படுகின்றது. தடுப்பூசி ஏற்றிக்கொண்டவர்களுக்குத் தொற்று ஏற்படும்போது தொற்றின் பாதிப்பும், அதனால் உயிராபத்தும் குறைவாகவே காணப்படும் என்றும் சொல்லப்படுகின்றது. அதேவேளையில் தொற்று ஏற்படுவதைத் தடுப்பூசி தடுக்காது என்றும் ஒரு வியாக்கியானம் சொல்லப்படுகின்றது. ஆக, வியாக்கியானங்களுக்குப் பஞ்சமில்லை. அதிலேகூட, "தொற்று ஏற்படுவதைத் தடுப்பூசி தடுக்காது, வீரியத்தையே குறைக்கும்" என்பதைக் கேட்கும்போது "சபாஷ், அப்படிப்போடு அரிவாளை" என்னும் சினிமாத்தனமான வசனம் மனதில் மின்னுவதைத் தவிர்க்க முடியவில்லை.

சுருங்கச்சொன்னால், தடுப்பூசி நிலைபேறான தீர்வு அல்ல என்பதே செஷெல்ஸ் அனுபவம் சொல்லுகின்ற செய்தியாகும்.

ஆனால், தடுப்பூசிக்காக உலகமே ஓடுகின்றது. கொரோனாவுக்கு முந்தைய உலகத்திற்கான திறப்பாகவே தடுப்பூசியைப் பலரும் கருதுகின்றனர். ஸ்விட்ச்சை அழுத்தி வெளிச்சத்தை ஏற்படுத்துவது போன்று, தடுப்பூசி மூலமாக கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம் என்பதே பரவலான எதிர்பார்ப்பாகும்.

சுத்தம் பேணுதல், தனித்து இருத்தல், சமூக இடைவெளியைப் பேணுதல், சனத்திரளைத் தவிர்த்தல், முகக்கவசம் அணிதல் போன்றவையே நிலைபேறான பாதுகாப்பைத் தரக்கூடியவையாகும். அடக்க ஒடுக்கமான இருப்பே உன்னதமான வாழ்வுமுறையாகத் தமிழ் மரபிலே சொல்லப்பட்டிருக்கின்றது. அஃது கொரோனாத் தொற்றுப் பாதுகாப்புக்கு அற்புதமாகவே பொருந்துகின்றது.

அன்றொருகாலத்தில் ஐவரின் ஊரடங்கை ஒரு தேசமே நம்பியதாக மகாபாரதம் சொல்கின்றது. அனைத்து வல்லமைகளையும் கொண்டிருந்தவர்களே, தேசத்துக்காக அஞ்ஞாதவாசம் செய்தார்கள். அஞ்ஞாதவாசம் என்பது வேறொன்றுமில்லை. வெளியுலகத் தொடர்புகளின்றி இருத்தலேயாகும்.

விராடதேசத்தில் எளிய பணியாளனாக தருமன் அடங்கினான். சர்வவல்லமை பொருந்திய வீமன் சமையல்காரனாகச் சுருங்கினான். வில்வித்தையில் வல்ல அருச்சுனன் திருநங்கையாக உத்தரையோடு அரண்மனை புகுந்தான். பாஞ்சாலி மறைந்திருந்தாள். குதிரை தொழுவத்தில் நகுலன் ஒதுங்கினான். ஆவினங்களைச் சகாதேவன் பராமரித்தான். ஒளிந்திருப்பது மட்டுமே உயிர்பிழைக்க வழி என்பதை பாண்டவர் உணர்ந்து கொண்டனர். பொறுத்தார் பூமியாள்வார், பொங்கினார் காடாள்வார் அல்லவா? அஞ்ஞாதவாசத்தின் முடிவில் பாண்டவர்களுக்கு இலக்கு வசப்பட்டதல்லவா?

அதேபோன்று, தனித்திரு! விழித்திரு! துணிந்திரு! என்பதையே இன்றையகாலத்தின் தாரகமந்திரமாகக் கொள்ளவேண்டும். அஃது அடுத்தவர் சொல்லி ஏற்படுவதல்ல. ஒவ்வொருவரும் சமூகப் பொறுப்புணர்ந்து ஏற்படுத்தவேண்டிய மனநிலையாகும். அத்தகைய பொறுப்புணர்வு கைவசப்படுகின்றபோது மட்டுமே மாற்றம் சாத்தியமாகும். அதன்வழியாகவே கொரோனாத் தொற்றிலிருந்து நிலைபேறான பாதுகாப்பு கைவசமாகும்.



# இங்கிலாந்தில் மற்றோர் அலையை இந்திய வைரஸ் உருவாக்கும் அச்சம்!

குமாரதாஸன்

இங்கிலாந்தில் பரவிவரும் மாறுபாடடைந்த இந்திய வைரஸ் திரிபு அங்கு மற்றோர் அலையாகத் தாக்கக் கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரசுக்கு சுகாதார ஆலோசனைகளை வழங்குகின்ற அறிவியல் குழுவின் உறுப்பினரான பேராசிரியர் ஆண்ட்ரூ ஹேவர்ட் (Prof Andrew Hayward) "இங்கிலாந்து மற்றோர் வைரஸ் அலையின் ஆரம்ப கட்டத்தில் உள்ளது" என்று பிபிசியிடம் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை - இங்கிலாந்து தனது மக்களின் முழுமை யான நோய் எதிர்ப்புச் சக்திக்கான ஓர் ஊக்கியாக (Booster) மூன்றாவது தடுப்பூசி ஒன்றை மேலதிகமாக வழங்குவதுபற்றி ஆலோ சித்து வருகிறது தற்போது வழங்கப்பட்டு வருகின்ற இரண்டு தடுப்பூசிகளும் மட்டும் கொரோனா வைரஸின் மாறுபாடடைந்த திரிபுகளை முழுமையாக எதிர்ப்பதற்குப் போதுமா?

இந்தியாவில் தோன்றிப் பரவி வருகின்ற வைரஸ் திரிபு தடுப்பூசிகளை எதிர்க்கின்ற வல்லமை வாய்ந்ததா? இவை போன்ற கேள்விகளுக்கு முழு அளவிலான அறிவியல் ஆராய்ச்சிகள் மூலம் தெளிவான பதில் இன்னமும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் இந்தியத் திரிபு வைரஸின் பரவல் இங்கிலாந்தில் அதிகரித்து வருகிறது. இதுவரை சுமார் மூவாயிரம் பேருக்கு இந்தியத் திரிபு வைரஸ் தொற்றியுள்ளது. அதனை எதிர்கொள்ளவும் புதிய வைரஸ் கிரிமிகளிடம் இருந்து நிலையான பாதுகாப்பைப் பெறவும் மூன்றாவது ஊசி ஓர் ஊக்கியாக (Booster)இருக்கும் என்று நம்பப்படுகிறது.

மூன்றாவது தடுப்பூசியாக வழங்குவதற்கு ஏழு வகையான தடுப்பூசிகளில் ஒன்றைத் தெரிவு செய்வதற்காக அவற்றைப் பரீட்சித்துப் பார்க்கும் சோதனைகள் (clinical trial) ஆரம்பிக்கப் பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சர் ஆயவவ Hancock அறிவித்திருக்கிறார். உலகில் கொரோனா வைரஸுக்கு மூன்றாவது தடுப்பூசியைப் பரிசோதிக் கின்ற முதலாவது முயற்சி இதுவாகும். ஆயிரக்கணக்கான தொண்டர்களில் நடத்தப் படுகின்ற இந்தப் பரிசோதனை களின் தரவு களின் அடிப்படையில் எதிர்வரும் குளிர் காலத்துக்கு முன்பாக மூன்றாவது ஊசி ஏற்றும் இயக்கத்தை ஆரம்பிக்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை - செல்வந்த நாடுகள் இவ்வாறு இரண்டுக்கு மேற்பட்ட ஊசி மருந்துப்பாவனை பற்றி ஆலோசித்து வருகின்ற போது உலகின் பல வறிய நாடுகளில் இன்னமும் பல மில்லியன் மக்களுக்கு முதல் தடுப்பூசி கூட எட்டாத நிலைமை காணப்படுகிறது.

**உலக சுகாதார நிறுவனம் கவலை**

செல்வந்த நாடுகள் சில அடுத்த கட்டமாக குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினருக்குத் தடுப்பூசி ஏற்றுவதற்கு ஆயத்தமாகி வருகின்றன. அதே சமயம் வறிய நாடுகளில் வளர்ந்தோருக்கும் வயோதிபர்களுக்கும் இன்னமும் ஓர் ஊசி கூட எட்டவில்லை. வைரஸ் தடுப்பூசிப் பங்கீட்டில் காணப்படும் இத்தகைய ஏற்றத்தாழ்வுகளைச் சுட்டிக் காட்டியிருக்கின்ற உலக சுகாதார அமைப்பின் தலைவர், தங் களது குழந்தைகளுக்குத் தடுப்பூசி ஏற்ற விரும்பும் செல்வந்த நாடுகள் அதைக் கைவிட்டு அந்தத் தடுப்பூசிகளை வறிய நாடுகளுக்கு வழங்க முன்வர வேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

---

# பலஸ்தீனர்களின் ஏவுகணைகளை எதிர்கொள்ள இஸ்ரேல் இராணுவம் பயன்படுத்திய "அயர்ன் டோம்"



இஸ்ரேல் மற்றும் பாலத்தீனத்திற்கு இடையே கடந்த 11 நாட்களாக நடைபெற்று வந்து மோதல் (தற்காலிகமாக?) நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த சண்டை நிறுத்தம் நேற்று வெள்ளிக்கிழமை முதல் அமலுக்கு வந்துள்ளது. இதுவரை நடைபெற்ற மோதலால் சுமார் 240 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் பெரும்பாலானவர்கள் காசாவை சேர்ந்தவர்கள்

மோதல் முடிவுக்கு வந்தவுடன் பாலத்தீன மக்கள் காசாவின் சாலைகளுக்கு வந்து "இறைவன் சிறப்பானவர், இறைவனுக்கு நன்றி" என கோஷம் எழுப்பினர். இந்த சண்டையில் இஸ்ரேல் மற்றும் பாலத்தீனத்தை சேர்ந்த ஹமாஸ் ஆயுதக் குழு என இரு தரப்புமே தாங்கள் வெற்றி பெற்றதாக அறிவித்து கொண்டன.

11 நாட்களாக நடைபெற்ற இந்த மோதலில் இஸ்ரேலின் போர்த் தொழில்நுட்பம் ஒன்று உலக கவனத்தைப் பெற்று வருகிறது. இதை 'அயர்ன் டோம்' (Iron Dome) என்று அழைக்கிறது இஸ்ரேல்.

இந்தப் போரில் தினமும் இஸ்ரேலை நோக்கி பல நூறு ராக்கெட்டுகள்/ஏவுகணைகள் இஸ்ரேலின் மக்கள் தொகை அதிகம் இருக்கும் நகரங்களை நோக்கி ஏவப்படுகின்றன. ஆனால், இதில் இஸ்ரேல் பகுதிகளில் பாதிப்புகளை ஏற்படுத்துவது வெகுசிலதான். காஸா விலிருந்து ஏவப்படும் ராக்கெட்டுகள்/ஏவுகணைகள் அனைத்தையும் வானிலேயே துவம்சம் செய்துவிடுகிறது ஹஅயர்ன் டோம்' அமைப்பு.

இஸ்ரேலைக் குறிவைத்துத் தாக்க வரும் ராக்கெட்டுகளைக் கண்டுபிடிப்பதற்காக அதிநவீன ரேடார் அயர்ன் டோமில் உண்டு. வரும் ராக்கெட்டுகளை ரேடார்கள் கண்டறிந்ததும் அதை அழிக்க இரண்டு இடைமறிப்பு ஏவுகணைகளை ஏவும் இந்த அமைப்பு. இது மட்டுமல்ல, வரும் ஏவுகணைகள் மற்றும் ராக்கெட்டுகளில் எது மக்கள் வாழும் பகுதிகளைத் தாக்க வருகிறது என்பதைப் பிரித்தறிந்து அதை மட்டும் தாக்கும் திறன் அயர்ன் டோமுக்கு உண்டு.

தேவையில்லாமல் ஏவுகணைகள் வீணாவதை இது குறைக்கும். இரவு, பகல் என எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் எந்த வானிலையிலும் இது இயங்கவல்லது. பெயருக்கு ஏற்றாற்போல் கண்ணுக்குத் தெரியாத ஒரு இரும்புக்கேடயத்தை இது உருவாக்குகிறது. இந்தப் போரில் பேரளவு உயிர்ச்சேதங்களைத் தவிர்த்திருக்கிறது அயர்ன் டோம்.தீபாவளி வானம் போல வானில் ராக்கெட்டுகளை இடைமறித்து அவற்றை அயர்ன் டோம் அழிக்கும் காட்சிகள் இன்று இஸ்ரேலில் சர்வ சாதாரண ஒன்றாகவே மாறிவிட்டன.

அதற்காகக் குறைகளே இல்லை என்றில்லை.

> ஒரு பலம் பொருந்திய இராணுவ - ஆயுதக் கட்டமைப்பு தன்னிடம் இருக்கிறது என்பதால்தான் பிரச்னைகளுக்குத் தீர்வு காண மறுக்கிறது இஸ்ரேல் என்பதுதான் அரசியல் ஆய்வாளர்களின் கருத்தாக இருக்கிறது.

இன்னும் 90% தான் ராக்கெட்டுகளைத் தடுக்கிறது அயர்ன் டோம். இன்னும் பலம் பொருந்திய நாட்டின் தாக்குதல்களை சமாளிக்குமா என்பது கேள்விக்குறிதான் என்கிறார்கள்.

இந்த அதிநவீனப் போர் இயந்திரம் அவ்வளவு எளிதில் தயாராகிவிடவில்லை. இந்த ரக தளவாடத்தை மேம்படுத்த இஸ்ரேலுக்குப் பல ஆண்டுகள் தேவைப் பட்டன. 2006 இல் தெற்கு லெபனானில் செயல்படும் ஹெஸ்புல்லா என்கிற அமைப்புடன் இஸ்ரேலுக்கு மோதல் ஏற்பட்டது. அதில் ஆயிரக்கணக்கான ராக்கெட்டுகளை சரமாரியாக ஏவியது அந்த அமைப்பு. இதனால் பெருஞ்சேதத்தைச் சந்தித்தது இஸ்ரேல். தாக்குதலில் மக்கள் பலரும் பலியாகினர். இதன் விளைவாக ராக்கெட்டுகளிலிருந்தும், ஏவுகணைகளிலிருந்தும் தற்காத்துக்கொள்ள அதிநவீனப் பாதுகாப்பு அரண் ஒன்று அமைக்கப்படும் என்றது இஸ்ரேல்.

அதன்பின் இஸ்ரேலின் அட்வான்ஸ்டு டிஃபென்ஸ் சிஸ்டம்ஸ், இஸ்ரேல் ஏரோஸ்பேஸ் இன்டஸ்ட்ரீஸ் ஆகிய நிறுவனங்கள் சேர்ந்து தயார் செய்ததுதான் இந்த அயர்ன் டோம். இந்தத் திட்டத்திற்காக அமெரிக்காவிடமிருந்து 200 மில்லியன் டாலர் நிதியைப் பெற்றது. பலவித ஆராய்ச்சிகளும் சோதனைகளுக்கும் உட்படுத்தப்பட்டு 2011இல் செயல்பாட்டுக்கு வந்தது முதல் அயர்ன் டோம் அமைப்பு.

இப்படியான ஒரு பலம் பொருந்திய அமைப்பு தன்னிடம் இருக்கிறது என்பதால்தான் பிரச்னைகளுக்குத் தீர்வு காண மறுக்கிறது இஸ்ரேல் என்பதுதான் அரசியல் ஆய்வாளர்களின் கருத்தாக இருக்கிறது.

வெறுமனே போர்த் தொழில் நுட்பத்தைப் புகழ்வதால் எந்தப் பயனுமில்லை. போர் இல்லாத உலகம்தான் நாகரிகமான உலகம். அதுவும் உலகமே ஒரு பெருந்தொற்றைச் சந்தித்துத் துயரத்தில் மூழ்கியிருக்கும் வேளையில் எந்த வடிவிலான போரும், என்ன புதிய தொழில்நுட்ப ஆயுதமும் மானுடத்தின் அவமானச் சின்னமே.

# இலங்கையில் பொறுப்புக்கூறலுக்கு சர்வதேச பொறிமுறை மிக அவசியம்

*அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் தீர்மானம்.*

**வொஷிங்டன், மே 22**

**இலங்கையில் இடம்பெற்ற போரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டமை தொடர்பில் பொறுப்புக்கூறலுக்காக சர்வதேச பொறிமுறை நிறுவப்பட வேண்டும். அத்துடன், இலங்கை இனப்பிரச்னைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என வலியுறுத்தி அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது.**

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 12 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி அமெரிக்க பிரதிநிதிகள் சபை உறுப்பினர் டெபோரா ரோஸ் இந்தத் தீர்மானத்தை சபையில் முன்வைத்தார்.

இலங்கை இராணுவம் முள்ளிவாய்க்காலில் தாக்குதல்களை நடத்தி பல்லாயிரக்கணக்கான மக்களைக் கொன்று 12 ஆண்டுகள் கடந்துவிட்டன. இவ்வாறான படுகொலைகள் இடம்பெற்று ஒரு தசாப்தம் கடந்துவிட்ட போதும் குற்றவாளிகளைப் பொறுப்புக் கூறச் செய்ய இலங்கை அரசு தவறிவிட்டது.

அத்துடன், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் வழங்கிய வாக்குறுதிகளையும் இலங்கை நிறைவேற்றவில்லை.

போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு பரிகாரம் செய்யவோ, அவை குறித்து விசாரிக்கவோ, வழக்குத் தொடரவோ தவறி வருவதன் மூலம் இலங்கையில் தண்டனை விலக்குக் கலாச்சாரம் நிலவுகிறது எனவும் அந்தத் தீர்மானம் குறிப்பிடுகிறது.

உள்நாட்டு பொறுப்புக் கூறல் பொறிமுறை மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படும் என்று இலங்கை அரசு தொடர்ந்து கூறி வருகிறது. எனினும் அது செயல்படுத்தப்படவில்லை.

இலங்கையின் தமிழ் மக்கள் பல்லாயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர். பெருமளவானோர் காணாமல் போகச் செய்யப்பட்டனர். போரின்போது துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றன.

பல ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டனர் என்பதையும் தீர்மானம் வலியுறுத்தியுள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட இலங்கையில் பாரம்பரிய தமிழர் தாயக பகுதிகளில் இரண்டு பொதுமக்களுக்கு ஒரு படைச் சிப்பாய் என களமிறக்கப்பட்டு அப்பகுதி இராணுவமயமாக்கப்பட்டுள்ளது எனவும் தீர்மானம் குறிப்பிடுகிறது.

மேலும், நிரந்தர அரசியல் தீர்வுக்காக வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் கருத்தறிய ஐ.நா. பொது வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என அழைப்பு விடுத்து வடக்கு மாகாண சபை தீர்மானம் நிறைவேற்றியதையும் தீர்மானம் சுட்டிக்காட்டுகிறது.

அமெரிக்க பிரதிநிதிகள் சபை தீர்மானத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது.

(1) இலங்கையில் போர் முடிவடைந்த 12 -ஆவது ஆண்டு நிறைவில் மோதலால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் அமெரிக்க பிரதிநிதிகள் சபை ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறது.

(2) இறந்தவர்களை நினைவு கூர்ந்து மதிப்பளிப்பதுடன், நல்லிணக்கம், அபிவிருத்தி, இழப்பீடு மற்றும் மீள்கட்டுமானத்துக்காக ஏங்கும் இலங்கையில் உள்ள அனைத்து சமூக மக்களுடனும் ஆதரவாக நிற்பதை அமெரிக்கா பிரதிநிதிகள் சபை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

(3) மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஆதாரங்களை சேகரிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் முன்னுரிமை அளித்ததற்காக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையை சபை பாராட்டுகிறது. இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கம் தலையிடக் கூடாது என வலியுறுத்துகிறது.

(4) காணாமல் போகச் செய்யப்பட்ட தமிழ் குடும்பங்கள் உட்பட, இலங்கையில் உள்ள அனைத்து சமூகங்களிலும் நீதிக்காக பாடுபடும் சட்டத்தரணிகளில் துணிச்சலையும் அர்ப்பணிப்பையும் சபை அங்கீகரிக்கிறது.

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் உள்ளிட்ட போராடும் தரப்பினர் சில சமயங்களில் அரசாங்க பாதுகாப்புப் படையினரால் அச்சுறுத்தப்படுவதுடன், துன்புறுத்தல்களையும் எதிர்கொள்வதையும் சபை சுட்டிக்காட்டுகிறது.

(5) இலங்கையின் வரலாற்று ரீதியாக ஒடுக்கப்பட்டுவரும் வடக்கு, கிழக்கு பிராந்தியத்தின் அரசியல் உரிமைகள் மற்றும் பிரதிநிதித்துவத்தை ஏற்று, பாதுகாக்க முன்வருமாறு சர்வதேச சமூகத்தை சபை வலியுறுத்துகிறது. அத்துடன் இன மோதலுக்கு வழிவகுத்த அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வு காண ஒரு நிரந்தர அரசியல் தீர்வை நோக்கி முன்னேற சபை அழைப்பு விடுக்கிறது.

(6) ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை உயர் ஸ்தானிகரின் பரிந்துரைகளுக்கு இணங்க விசாரணைகள் மற்றும்வழக்குகளை முன்னெடுக்க அமெரிக்கா பரிந்துரைக்கிறது எனவும் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட குற்றவாளிகள் அதற்குப் பொறுப்புக் கூற வேண்டும். எனினும் இலங்கை அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கத் தடையாக உள்ளதாக அமெரிக்க பிரதிநிதிகள் சபை உறுப்பினர் டெபோரா ரோஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தை பொறுப்புக்கூற செய்யும் முயற்சியாக சர்வதேச பொறிமுறையை நிறுவுவதற்கான சர்வதேச சமூகத்தின் முயற்சிகளை நான் பாராட்டுகிறேன்.

மேலும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு நீதி வழங்கவும் பொறுப்புக்கூறலை உறுதி செய்யவும் இன்னும் தாமதமின்றிச் செயல்படுமாறு ராஜபக்ச அரசாங்கத்தை ஊக்குவிக்கிறேன் என தீர்மானத்திற்கு இணை தலைமை தாங்கிய ஜோன்சன் கூறினார்.

# கொத்மலை ஆடை ஆலையில் மேலும் 26 பேருக்கு கொரோனா

கொழும்பு, மே 22

கொத்மலை நியகங்தொர பகுதியில் உள்ள தனியார் ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் மேலும் 26 ஊழியர்களுக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சீ.ஆர் பரிசோதனை முடிவுகளுக்கு அமைய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதாக கொத்மலை பொது சுகாதார பரிசோதகர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

அங்கு பணிப் புரிந்த 82 ஊழியர்களுக்கு ஏற்கனவே தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அந்த தொற்றாளர்களுடன் தொடர்பை பேணிய 90 பேருக்கு பி.சீ.ஆர் பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது.

இதன்போதே மேற்குறித்த 26 ஊழியர்களுக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளதாக கொத்மலை பொது சுகாதார பரிசோதகர் காரியாலய அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

26 தொற்றாளர்களில் 18 பேர் பூண்டுலோயா பொலிஸ் பிரிவுக்குட்பட்டவர்கள் என்பதுடன் மிகுதி 8 பேரும் புஸ்ஸலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்டவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

புதிய தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்த அனைவரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக கொத்மலை பொது சுகாதார பரிசோதகர் காரியாலயம் தெரிவித்துள்ளது.



# கொழும்பு துறைமுகத்தில் கப்பலொன்று தீப்பற்றியது!

கொழும்பு, மே 22

கொழும்பு துறைமுகத்திற்கு வடமேற்கே 9.5 கடல் மைல் தொலைவில் நங்கூரமிட்ட எக்ஸ்பிரஸ் பேர்ள் ( X-PRESS PEARL) என்ற கொள்கலன் சரக்குக் கப்பல் நேற்று முன்தினம் மாலை திடீரென தீப்பற்றி தொடர்ந்து எரிந்து வருகிறது.

கப்பல் தீப்பற்றியதை அடுத்து மீட்புப் பணிகளுக்காக இலங்கை கடற்படை ஆழ்கடல் கண்காணிப்பு கப்பல்களான சாகர, சிந்துரால மற்றும் வேகப் படகுகள் சம்பவ இடத்துக்கு உடனடியாக விரைந்தன. இந்த கப்பலில் ஏற்பட்ட தீயை கட்டுப்படுத்த துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமான இழுவைப் படகு ஒன்றும் நிறுத்தப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில் பதிவுசெய்யப்பட்ட இந்த கப்பல் கடந்த 15 ஆம் திகதி இந்தியாவின் குஜராத் துறைமுகத்திலிருந்து 1486 கொள்கலன்கள், இரசாயனப் பொருகள் மற்றும் மற்றும் அழகுசாதனப் பொருட்களுடன் புறப்பட்டது. கொழும்பு கடற்கரையில் இருந்து 9.5 கடல் மைல் தொலைவில் நங்கூரமிட்டிருந்தபோது தீ விபத்து ஏற்பட்டது.

கப்பலில் பிலிப்பைன்ஸ் நாட்டவர்கள், சீனர்கள், இந்தியர்கள் மற்றும் ரஷ்யர்கள் உட்பட 25 பேர் இருந்தனர். அவர்கள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர். கப்பலில் இரசாயனங்கள் கசிந்ததே தீவிபத்துக்குக் காரணமாக இருக்கலாம் என முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கப்பல் தீப்பற்றி எரிந்து வருவதால் ஏதேனும் அசாதாரண நிலை ஏற்பட்டால் அவசரகால நடவடிக்கைக்கு கடற்படை விசேட படையணிகள் மற்றும் கடலோர காவல்படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவில் சில பகுதிகள் நேற்று முதல் விடுவிப்பு

முல்லைத்தீவு, மே. 22

புதுக்குடியிருப்பு அடைத் தொழிற்சாலை கொத்தணி பரவலை அடுத்து தனிமைப்படுத்தப்பட்டிருந்த சில பகுதிகள் உடன் அமுலாகும் வகையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் அதிகார பிரதேச பகுதிக்குட்பட்ட தேவிபுரம், புதுக்குடியிருப்பு மேற்கு, புதுக்குடியிருப்பு கிழக்கு, மந்துவில், மல்லிகைத்தீவு, கோம்பாவில், உடையார்கட்டு தெற்கு மற்றும் வடக்கு, வள்ளிபுனம், முள்ளியவளை மேற்கு மற்றும் வடக்கு ஆகிய கிராம சேவகர் பகுதிகளை தவிர்ந்த ஏனைய பகுதிகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா இத்தகவலை தெரிவித்துள்ளார்.

# முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தோருக்கு வலி.மேற்கு பிரதேச சபையில் அஞ்சலி

யாழ்ப்பாணம், மே. 22

முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு வலி.மேற்கு பிரதேச சபையில் நேற்று வெள்ளிக்கிழமை அமர்வில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

தவிசாளர் த.நடனேந்திரனின் ஏற்பாட்டில் இந்த நினைவேந்தல் இடம்பெற்றது.

இதேவேளை, அரசியலுக்காகவும் ஊடகங்களில் பிரசாரப்படுத்துவதற்காகவுமே இவ்வாறான நினைவேந்தல்கள் இடம்பெறுவதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

படையினர் வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறார்கள். அதேபோன்று நினைவேந்தல் செய்யும் அரசியல்வாதிகளும் மக்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்க முன்வரவேண்டும் எனவும் மேற்படி கட்சி உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

எதிர்ப்புத் தெரிவித்த கட்சி உறுப்பினர்கள் சிலர் நினைவேந்தலில் பங்கெடுக்கவில்லை.

இறுதிவரை முள்ளிவாய்க்காலில் இருந்து அவலங்களைச் சந்தித்த உறுப்பினர்களான திருமதி சுபாஜினி, து.சுஜிந்தன் ஆகியோர் தாம் சுமந்தவலிகளை வெளிப்படுத்தி உரையாற்றியதுடன் அந்த மக்களுக்கான நினைவேந்தலை கொச்சைப் படுத்த வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டனர்.

# இஸ்ரேல் - ஹமாஸ் போர் நிறுத்தம்!

## நேற்று காலை முதல் நடைமுறை!

ஜெருசலேம், மே 22

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே கடந்த 11 நாட்களாக நீடித்து வந்த உக்கிர மோதல் சர்வதேசத்தின் கடும் அழுத்தத்தால் முடிவுக்கு வந்துள்ளது. நேற்று வெள்ளிக்கிழமை காலை முதல் இரு தரப்புக்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்துள்ளது. 11 நாட்கள் நீடித்த மோதலால் 240 பேர் உயிரிழந்தனர். இவர்களில் பெரும்பங்கினர் காஸா பகுதியை சேர்ந்தவர்களாவர்.

மோதல் முடிவுக்கு வந்துள்ள நிலையில் காஸா வீதிகளில்கூடிய பலஸ்தீனர்கள், "இறைவன் சிறப்பானவர், இறைவனுக்கு நன்றி", என கோஷங்களை எழுப்பி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். இந்த மோதலில் தங்களுக்கே வெற்றி என இஸ்ரேல் இராணுவமும், ஹமாஸ் போராளிகளும் உரிமை கோரியுள்ளன.

இதேவேளை, இஸ்ரேல் -பலஸ்தீனம் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் அடுத்தகட்டத்திற்கு செல்வதற்கான ஓர் உண்மையான வாய்ப்பை வழங்குகிறது என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமையும் காஸா மீது இஸ்ரேல் உக்கிர விமானத் தாக்குதல்களை நடத்தியது. ஹமாஸ் போராளிகளின் நூறிற்கும் மேற்பட்ட இலக்குகளைக் குறிவைத்து இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றன. ஹமாஸ் போராளிகளும் இஸ்ரேல் நோக்கி சரமாரி ஏவுகணை தாக்குதல்களை நடத்தி பதிலடி கொடுத்தனர்.

ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு ஜெருசலேம் நகரில் முஸ்லிம்களும் யூதர்களும் புனிதமாக கருதும் இடத்திலிருந்து மே மாதம் 10ஆம் திகதி இருதரப்பு மோதல்கள் ஆரம்பித்தன.



ஆக்கிரமித்துள்ள பகுதியில் இருந்து பலஸ்தீனர்களை இஸ்ரேல் இராணுவம் பலவந்தமாக வெளியேற்ற முயன்றது. அத்துடன் புனித தலத்தில் வழிபாட்டுக்காகக் கூடிய பலஸ்தீனர்கள் மீது கொடூர தாக்குதல்கள் நடத்தப்பட்டனர். இதில் 300இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர். அவர்களில் இருவர் மரணமடைந்தனர்.

இந்நிலையில், அந்த இடத்திலிருந்து பின் வாங்குமாறு இஸ்ரேலை ஹமாஸ் எச்சரித்து ஏவுகணை தாக்குதல்களை தொடுத்தது. இஸ்ரேல் பதில் தாக்குதலை தொடங்கியது. இதனையடுத்து வெடித்த இருதரப்பு மோதல்களில் காஸாவில் உட்பட 232 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் சிறுவர்கள் மற்றும் பெண்களாவர் என்று பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேசமயம், காஸாவில் கொல்லப்பட்டவர்களில் 150 பேர் ஹமாஸ் குழுவை சேர்ந்தவர்கள் என்று இஸ்ரேல் தெரிவிக்கிறது. ஆனால், ஹமாஸ் குழுவினர் தங்கள் குழுவில் எத்தனை பேர் உயிரிழந்தனர் என்ற தகவலை வெளியிடவில்லை.

ஹமாஸின் தாக்குதலில் சிறுவர்கள் உட்பட 12 பொதுமக்கள் தங்கள் நாட்டில் உயிரிழந்தனர் என இஸ்ரேல் அறிவித்துள்ளது. இந்நிலையில் மோதலை நிறுத்துமாறு இஸ்ரேல் -பலஸ்தீன தரப்புக்களுக்கு சர்வதேச ரீதியாக கடும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன.

எகிப்து, கட்டார் மற்றும் ஐ. நா. இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு மத்தியஸ்தம் செய்து இரு தரப்பினரும் பேச்சுகளை முன்னெடுத்தனர். இஸ்ரேல் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட காஸா பிராந்தியத்திற்கு, போர் நிறுத்த முயற்சிகளில் ஈடுபட இரு பாதுகாப்பு அதிகாரிகளை எகிப்திய ஜனாதிபதி சிசி அனுப்பி வைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



## நக்சல்கள் மீது தாக்குதல்! 13 சடலங்கள் மீட்கப்பட்டன

புதுடில்லி, மே 22

இந்தியாவில் நக்சலைட் போராளிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையே நேற்று மோதல் இடம்பெற்றது. இதில் பல நக்சல்கள் கொல்லப்பட்டனர். இதுவரை 13 நக்சலைட்களின் சடலங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலத்தின் கட்சிரோலி மாவட்டத்தில் எட்டப்பள்ளி வனப்பகுதியில் இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த நடவடிக்கை மகாராஷ்டிர பொலிஸாருக்கு மிகப்பெரிய வெற்றியாக அமைந்துள்ளது. இந்த நடவடிக்கையில் அதிகமான நக்சல்கள் அழிக்கப்படுவதற்கான வாய்ப்பு உள்ளது என கட்சிரோலி துணை பொலிஸ் ஆய்வாளர் ஜெனரல் சந்தீப் பட்டேல் தெரிவித்துள்ளார். (ஐ)

## சர்வதேச பயணங்களை தவிருங்கள்!

### உலக சுகாதார ஸ்தாபனம் அறிவுறுத்து

லண்டன், மே 22

கொரோனா பரவலை கருத்தில் கொண்டு சர்வதேச பயணங்களை தவிர்க்க வேண்டும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஐரோப்பாவுக்கான இயக்குநர் ஹன்ஸ் கூறும்போது, "நாம் தொடர்ந்து அச்சத்தில் உள்ளோம். நாம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். எனவே, சர்வதேசப் பயணங்களை நிச்சயம் தவிர்க்க வேண்டும்.

இந்தியாவில் கண்டறியப்பட்ட பி.1.167 என்ற உருமாற்றம் அடைந்த வைரஸ் வேகமாக பரவக் கூடியது. இது வரை இந்த வைரஸ் 53 நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளது. இதுவரை கண்டறியப்பட்ட அனைத்து திரிபு அடைந்த வைரஸ்களுக்கு எதிராக அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகள் சிறப்பாகச் செயல்படுகின்றன" என்று தெரிவித்துள்ளார்.



## அல்கொய்தா பயங்கரவாதிகளுடன் தலிபான்கள் நெருக்கமான உறவு!

### எச்சரிக்கிறது அமெரிக்கா

வாஷிங்டன், மே 22

அல்கொய்தா பயங்கரவாதிகள் அமைப்புடன் தலிபான் அமைப்பினர் நெருங்கிய தொடர்பு வைத்துள்ளனர் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் நாட்டின் அரசுக்கும், தலிபான் பயங்கரவாதிகளுக்கும் இடையே நீண்டகாலமாக போர் நடந்து வருகிறது. இதனால் பெண்கள், குழந்தைகள் உள்பட பொதுமக்கள் பலர் கொல்லப்படுகின்றனர். இதனை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியாக இரு தரப்புகளும் கட்டாரின் தலைநகர் டோஹாவில் அமைதிப் பேச்சு நடத்துகின்றனர்.

ஒருபுறம் அமைதி ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் நடந்தாலும், மறுபுறத்தில் தலிபான்கள் தாக்குதல்களை தொடர்ந்து வருகின்றனர். இந்த நிலையில், எதிர்வரும் செப். 11ஆம் திகதிக்குள் படைகளை முழுமையாக பெறும் முடிவில் அமெரிக்கா உள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் தலிபான்கள் ஹெல்மண்ட் மாகாணத்தில் நடத்திய வெடிகுண்டு தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டனர். இரு சிறுவர்கள் படுகாயமடைந்னர் என்று ஆப்கான் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தலிபான்களும், அல்கொய்தா பயங்கரவாதிகளும் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்தியுள்ளனர். இவர்கள், ஆப்கான் அரசு மற்றும் அதிக மக்கள் கொண்ட மையங்களில் மிகப்பெரியளவில் தாக்குதல்களை நடத்தத் தயாராகி வருகின்றனர் என்று அமெரிக்க புலனாய்வு பிரிவு எச்சரித்துள்ளது. (ஐ)

## உலகின் மிகப்பெரிய பனிப்பாறை அந்தாட்டிக்கா கண்டத்தில் உடைந்தது

நியூயோர்க், மே 22

அந்தாட்டிக்கா கண்டத்தில் உள்ள உலகிலேயே மிகப்பெரிய பனிப்பாறை நேற்றுமுன்தினம் உடைந்தது. இதனால் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கவலை அடைந்துள்ளனர்.

அந்தாட்டிக்கா கண்டத்தில் இலட்சக்கணக்கான பனிப்பாறைகள் சூழ்ந்துள்ளன. புவி வெப்பமயமாதலை இந்தப் பனிப்பாறைகளே சமன் செய்து வருகின்றன. இதனிடையே, மக்களின் வாழ்வியல் மாற்றங்கள், அதிகரிக்கும் தொழிற்சாலைகள், கரியமில வாயு வெளியேற்றம் உள்ளிட்ட காரணங்களால் கடந்த சில வருடங்களாக அந்தாட்டிக்காவிலுள்ள பனிப்பாறைகள் உடைந்து வருகின்றன.

இது பூமிக்கு பெரும் ஆபத்தை விளைவிக்கக் கூடியது என விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர். பனிப்பாறைகள் உடைவதால் கடல்நீர் மட்டம் பல மடங்கு அதிகரித்து, கடலோர பகுதிகள் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்படும் என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையிலேயே, அந்தாட்டிக்காவிலுள்ள உலகிலேயே மிகப்பெரிய பனிப்பாறை நேற்று உடைந்தது. வேடேல் கடலில் அமைந்திருந்த இந்தப் பனிப்பாறை 4,320 சதுர கி.மீ. பரப்பளவு கொண்டது. அதாவது நமது யாழ்ப்பாணம் மாவட்டத்தை (1,025சதுர கி.மீ.) விட நான்கு மடங்கு பெரியது. புவி வெப்பமயமாதலே இந்தப் பனிப்பாறை உடைந்ததற்கு முக்கிய காரணம் என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனிடையே, உலக வெப்பநிலை 4 பாகையால் அதிகரித்தால், அந்தாட்டிக்காவிலுள்ள மூன்றில் ஒரு பகுதி பனிப்பாறைகள் உடைந்துவிடும் என்று பிரிட்டன் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.




### காலநிலை மாற்ற நெருக்கடி

## 50 ஆயிரம் மாணவர்கள் ஆஸியில் கூடி பேரணி!


சிட்னி, மே 22

அவுஸ்திரேலியாவில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் காலநிலை மாற்றம் குறித்து நடவடிக்கை எடுக்க கோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியா முழுவதும் காலநிலை பேரணிகளுக்காக பாடசாலை வகுப்புகளை புறக்கணித்து சுமார் 50 ஆயிரம் மாணவர்கள் வரை திரண்டனர் என்று கூறப்படுகின்றது.

இது காலநிலை நெருக்கடி குறித்து நடவடிக்கை எடுத்த இளைஞர்களின் சமீபத்திய அடிமட்ட பிரசாரம். உலகில் பாதகமான பருவநிலை மாற்றத்தைத் தடுத்து நிறுத்த உடனடியாக நடவடிக்கைகள் இடம்பெறவேண்டும் என்பதை வலியுறுத்தி அவுஸ்திரேலியா முழுவதும் போராட்டங்களை முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் கலந்து கொண்ட 17 வயதான டேவிட் சொரியானோ பி.பி.சியிடம் கூறுகையில், "நாங்கள் பயப்படுகிறோம், கவலைப்படுகிறோம். எங்களுக்குப் பின் வரும் தலைமுறைகளுக்கும், நமது சொந்த தலைமுறையினருக்கும் கூட எதிர்காலம் இருக்காது என்பதில் எங்களுக்கு சந்தேகம் உள்ளது," என்றார். (ஐ)




# “சரியான முடிவு”

லண்டன், மே 22

ஐ.பி.எல். தொடரை ஒத்தி வைத்தது சரியான முடிவு என்று நியூஸிலாந்து அணியின் தலைவர் கேன் வில்லியம்ஸன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் சில விஷயங்கள் (கொரோனா) மிக விரைவாக அதிகரித்தன. நாங்கள் விளையாடியபோது கொரோனா கட்டுப்பாட்டில் இருந்தோம். அது மிக சிறப்பாக இருந்தது. அந்த கட்டுப்பாட்டில் நாங்கள் நன்றாகக் கவனிக்கப்பட்டோம். ஆனால், சில மீறல்களும் இருந்தன.

இதனால், போட்டியை தொடர முடியவில்லை. ஐ.பி.எல். தொடரை ஒத்திவைத்தது சரியான முடிவுதான். கொரோனா வைரஸ் விரைவாக அதிகரிப்பதற்கு முன்னதாகவே ஐ.பி.எல். தொடரில் பெரும் பகுதியில் நாங்கள் கண்காணிக்கப்பட்டு வந்தோம்.

ஒரு நாடு மற்றும் கிரிக்கெட் வட்டாரத்தில் சில மீறல்கள் போன்றவை மிகவும் துன்பகரமான மற்றும் வெளிப்படையான சவாலான நேரங்கள் அவர்களுக்கு விரைவாக ஏற்பட்டு விட்டது. எங்களை பாதுகாப்பாக வீட்டுக்கு அழைத்துச் செல்ல அல்லது நாங்கள் எங்கு செல்ல வேண்டும் என்று நிறைய பேர் அதற்கான பணியில் ஈடுபட்டனர் - என்றார்.

கடந்த மாதம் இந்தியாவில் தொடங்கிய 14ஆவது ஐ.பி.எல். தொடரில் சில வீரர்களுக்கு தொற்று ஏற்பட்டது. இதையடுத்து ஐ.பி.எல். நிர்வாகம் கால வரையறையின்றி தொடரை ஒத்தி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அரையிறுதியில் சினியகோவா!



பார்மா, மே 22

பார்மா ஓப்பன் ரென்னிஸ் தொடரின் அரையிறுதி போட்டிக்கு சினியகோவா முன்னேறியுள்ளார்.

இத்தாலியின் பார்மாவில் பெண்களுக்கான தொழில்முறை ரென்னிஸ் சங்கத்தின் தொடர் நடக்கிறது.

இதில் நேற்று முன்தினம் நடந்த காலிறுதி ஆட்டத்தில் செக் குடியரசின் சினியகோவா, பிரான்ஸின் கரோலின் கார்சியை சந்தித்தார். முதல் செற்றில் போராடிய சினியகோவா 7-5 என கைப்பற்றினார்.

தொடர்ந்து அசத்திய இவர் இரண்டாவது செற்றில் 6-1 என எளிதாக வசப்படுத்தினார். முடிவில் சினியகோவா, 7-5, 6-1 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதியில் அமெரிக்காவின் ஸ்லோன் ஸ்ரீபன்ஸ், 6-3, 6-0 என இத்தாலியின் சாரா இரானியை வென்றார். அமெரிக்காவின் கோகோ காப், சக வீராங்கனை அனிசிமோவாவை 6-3, 6-3 என வென்று, அரையிறுதிக்கு முன்னேறினார். (ஐ)

## இங்கிலாந்து - இந்தியா தொடரை மாற்றி அமைக்குமாறு கோரிக்கை

புதுடில்லி, மே 22

இங்கிலாந்து - இந்திய தொடரின் அட்டவணையை மாற்றியமைக்குமாறு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை இங்கிலாந்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் ஜூன் 2ஆம் திகதி இங்கிலாந்து செல்கிறது இந்திய அணி. அங்கு, முதலில் நியூஸிலாந்து அணிக்கு எதிராக ஜூன் 18 - 22 ஆம் திகதி வரை சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் விளையாடுகிறது.

இதன் பின்னர், இங்கிலாந்து அணிக்கு எதிராக 5 டெஸ்ட் போட்டிகளில் ஓகஸ்ட் 4 - செப்ரெம்பர் 14 வரை விளையாடுகிறது. இந்தத் தொடரை முன்னதாக ஆரம்பித்து செப். 7ஆம் திகதிக்குள் முடிவடையுமாறு மாற்றி அமைக்கும்படி இந்திய கிரிக்கெட் சபை இங்கிலாந்தை கேட்டுள்ளது.

இடைநிறுத்தப்பட்ட ஐ.பி.எல். தொடரை நடத்தவே இவ்வாறு கேட்கப்பட்டுள்ளது. பெரும்பாலும், இந்தியாவுக்கு சாதகமாக முடிவு கிடைக்கலாம் என்று கூறப்படுகின்றது. (ஐ)

## ஆர்ச்சருக்கு மீண்டும் சத்திர சிகிச்சை!

லண்டன், மே 22

இங்கிலாந்து அணியின் ஜோப்ரா ஆர்ச்சருக்கு நேற்று மீண்டும் சத்திர சிகிச்சை இடம்பெற்றது.

முழங்கையில் ஏற்பட்ட காயத்தில் தொடர்ந்தும் வலி இருந்தமையால் அவருக்கு இரண்டாவது தடவையாக சத்திர சிகிச்சை இடம்பெற்றது.

முழங்கையில் ஏற்பட்ட காயத்தால் இந்தியாவுக்கு எதிராக இங்கிலாந்து அணி இந்தியாவில் விளையாடிய தொடரில் இடையிலேயே ஆர்ச்சர் விலகினார். அத்துடன், ஐ.பி.எல். தொடரிலும் அவர் பங்கேற்கவில்லை.

காயத்திலிருந்து மீண்டு வந்த ஆர்ச்சர், சஸ்ஸெக்ஸ் அணிக்காக விளையாடினார். பிறகு, முழங்கை காயத்தில் மீண்டும் வலி ஏற்பட்டதால் ஜூன் 2 முதல் தொடங்கவுள்ள நியூஸிலாந்துக்கு எதிரான தொடரிலிருந்து அவர் விலகினார்.

இந்நிலையிலேயே முழங்கை காயத்துக்காக நேற்று அறுவை சிகிச்சை மேற்கொண்டார். (ஐ)





# பயிற்றுநரானார் ராகுல் டிராவிட்!

புதுடில்லி, மே 22

இலங்கை வரவுள்ள இந்திய அணி பயிற்றுவிப்பாளராக ராகுல் டிராவிட் தெரிவாகியுள்ளார்.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப், டெஸ்ட் தொடரில் பங்கேற்க இந்திய அணி, ஜூன் 2ஆம் திகதி இங்கிலாந்து செல்கிறது. அதேநேரம், மற்றோர் இந்திய அணி ஜூலை 5 முதல்28 வரை இலங்கையில் விளையாடவுள்ளது.

கடந்த ஆண்டு கொரோனா தொற்றால் இரத்தான இந்தத் தொடரில் 5 ஒருநாள், 5 இருபது - 20 போட்டிகளில் இரு அணிகளும் விளையாடவுள்ளன.

இலங்கை வரும் அணியின் பயிற்றுவிப்பாளராக இந்திய அணியின் ராகுல் டிராவிட் செயல்படவுள்ளார். (ஐ)

## இலங்கை - இந்திய தொடர்; போட்டிகள் அதிகரிப்பு

கொழும்பு, மே 22

இலங்கை வரவுள்ள இந்திய அணி தலா 3 போட்டிகள் கொண்ட ஒருநாள், இருபது - 20 தொடர்களில் விளையாடவுள்ளது.

கடந்த வருடம் நடைபெறவிருந்த இந்தப் போட்டியை நடத்த முடியாமல் போனதால் இலங்கை கிரிக்கெட் சபைக்கு பெரும் நட்டம் ஏற்பட்டது. எனவே, இதனை ஈடுசெய்யும் நோக்கில், போட்டிகளை அதிகரிக்குமாறு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையிடம் இலங்கை கிரிக்கெட் சபை கேட்டது. இதற்கு இந்தியா சம்மதம் தெரிவித்துள்ளது.

இதனால், ஒருநாள், இருபது - 20 தொடர்களில் தலா இரு போட்டிகள் கூடுதலாக நடத்தப்படவுள்ளன. இந்தப் போட்டிகளுக்கு ரசிகர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகின்றபோதிலும் தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமம் மூலம் கூடுதல் வருமானத்தை பெற முடியும் என்று தெரிய வருகின்றது.

இதனிடையே, தென்னாபிரிக்கா அணி ஓகஸ்ட் மாதமும், ஸ்காட்லாந்து செப்ரெம்பர் மாதமும், ஆப்கானிஸ்தான் நவம்பர் மாதமும் இலங்கை வரவுள்ளன. அப்போதும் அதிக போட்டிகளில் விளையாட வலியுறுத்துவோம் என்று இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் ஷம்மி சில்வா தெரிவித்துள்ளார். (ஐ)

# ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்களுக்கு கொரோனா

கொழும்பு, மே. 22

நாட்டில் கொவிட் தொற்றினால் 1000க்கும் மேற்பட்ட சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அதில் 5 பேர் கொவிட் தொற்றினால் மரணித்துள்ளதாக சிறுவர் நோயியல் தொடர்பான வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார். அதனால் 12 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு கொவிட் தடுப்பூசி வழங்குவது மிக முக்கியமாகும் என அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

எதிர்காலத்தில் சிறுவர்களுக்கிடையில் கொவிட் தொற்று வேகமாக பரவும் அபாயம் இருப்பதனால் அவர்களை பாதுகாப்பதற்காக கொவிட் தடுப்பூசி வழங்குவது மிக அவசியம் என அவர் சுட்டிகாட்டியுள்ளார்.

அத்துடன், பல நாடுகளில் சிறுவர்களுக்கு கொவிட் தடுப்பூசியை செலுத்துவதாக வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

## அடிப்படைவாதத்தைத் துண்டிய குற்றச்சாட்டில் இளைஞர் கைது

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்புடைய சஹ்ரான் ஹாசீமின் அடிப்படைவாத போதனை வகுப்புகளை ஏற்பாடு செய்த குற்றச்சாட்டில் மாவனெல்லை, ஹெம்மாத்தகம பகுதியில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் 29 வயதுடைய குறித்த சந்தேகநபர், நேற்றுமுன்தினம் இரவு இவ்வாறு கைதுசெய்யப்பட் டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறித்த சந்தேகநபர் மூதூர், மாவனெல்லை, ஒலுவில் ஆகிய பிரதேசங்களில் அடிப்படைவாதத்தைத் தூண்டும் வகையிலான போதனை வகுப்புகளை ஏற்பாடு செய்துள்ளார் என்று விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். ஏற்கனவே இந்தக் குற்றச்சாட்டில் மேலும் 5 பேர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# கொரோனா சிகிச்சை நிலையமாகும் தொண்டமான் கலாசார நிலையம்!

கொழும்பு, மே. 22

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக, இறம்பொடை தொண்டமான் கலாசார நிலையம், சுமார் 270 படுக்கை வசதிகளுடன் கூடிய இடைநிலை சிகிச்சை நிலையமாக மாற்றப்படவுள்ளது.

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் வழிகாட்டலின் கீழ் , சுகாதார அமைச்சு மற்றும் இராணுவத்தின் உதவியுடன் நிர்மாணப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

எதிர்வரும் காலப்பகுதிகளில் மேலும் அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் இதுபோன்ற இடைநிலை சிகிச்சை நிலையங்களை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மலையக பகுதிகளில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு தகுந்த சிகிச்சை வசதிகளை வழங்கவும், நோய் கட்டுப்பாட்டு வழிமுறைகளை ஏற்படுத்தி கொடுக்கவும் சகல ஏற்பாடுகளும் சுகாதார அமைச்சு மற்றும் இராணுவத்தின் உதவியுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது என இ.தொ.காவின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மக்கள் அத்தியாவசிய காரணங்களுக்காக அன்றி வீட்டை விட்டு வெளியே செல்லுவதை தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் எனவும் கோரப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்



**பிறப்பு : 25.04.1944 இறப்பு: 20.05.2021**

### திருமதி மகாதேவன் மங்கயற்கரசி

யாழ். அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், சுதுமலை மானிப்பாயை வசிப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட மகாதேவன் மங்கயற்கரசி கடந்த (20.05.2021) வியாழக்கிழமை அன்று கனடாவில் இறைபாதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான இளையதம்பி – சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை – இரத்தினம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், மகாதேவனின் அன்பு மனைவியும், மகாதேவி (சாந்தா), மாலினிதேவி (மாலா), மஞ்சுளாதேவி (வசந்தா), மதிகாந்தன், மகேந்திரன், மங்களாதேவி (உஷா), மதியழகன் (சயந்தன்), காலஞ்சென்ற மதுரா ஆகியோரின் பாசமிகு தாயாரும், நந்தகுமார், ஈஸ்வரன், காலஞ்சென்ற பகிரதன், விஜயசிறி, பாலரூபி, திலக், கிரிஸ்தா ஆகியோரின் மாமியாரும், திலகவதி, காலஞ்சென்ற நகுலாம்பிகை, திருநாவுக்கரசு, இராஜகோபால், பூலோகவதி, காலஞ்சென்ற சாம்பசிவம், மணிமேகலை, தெய்வேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராசலிங்கம், அன்னலட்சுமி, தர்மலிங்கம், மகாலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சஜீபன் – றொசினி, சலூசா– அரவிந், பிரவீந், பவீந், பிரியந், திவீந், அஸ்வீந், லஸ்வீந், பிரசோ, லானிக்கா, சானிக்கா, ஜானிக்கா, பிரஜீவ், தாரிகா, மசீலியா, ஜோடன், ஒலிவியா ஆகியோரின் அன்புப் பேத்தியும்,பிரசான், றொசான், திருசன், ஆகாஸ், சஞ்சே ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று சனிக்கிழமை மாலை 5.00 மணி – 8.00 மணிவரையும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி – 11.00 மணிவரையும் St John’s Dixie Cemetery & Crematorium, 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada என்னும் இடத்தில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு இடம்பெற்று நண்பகல் 12.00 மணிக்கு அதே இடத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு:**
**சாந்தா - மகள் +16473096844**

## யாழ்ப்பாணத்தில் 90.8 மி.மீ. மழை!

யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் 90.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவானதாக திருநெல்வேலி வானிலை அவதானிப்பு நிலைய பொறுப்பதிகாரி பிரதீபன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை 6 மணிக்குப் பின்னர் யாழ்ப்பாண குடாநாட்டின் பல இடங்களிலும் மழை பெய்தது. இதனடிப்படையில், யாழ்ப்பாணத்தில் 16.5 மி.மீற்றர், பருத்தித்துறையில் 144.5மி.மீ. சாவகச்சேரியில் 90.8 மி.மீ. மழை வீழ்ச்சி பதிவாகின. இதனடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 90.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவானது.

இதேசமயம், எதிர்வரும் மூன்று நாட்களுக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் மழையுடன் கூடிய காலநிலை நிலவும் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ)

## 13,649 பேருக்கு கொரோனா!

கொழும்பு, மே. 22

கொரோனா வைரஸ் தாக்கத்தால் மத்திய மாகாணத்தில் கடந்த ஒக்ரோபர் 4 ஆம் திகதி முதல் நேற்று காலை 6 மணி வரை 13 ஆயிரத்து 649 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

இதன்படி நுவரெலியா மாவட்டத்தில் 3,023 பேருக்கும், கண்டி மாவட்டத்தில் 7,836 பேருக்கும், மாத்தளை மாவட்டத்தில் 2,790 பேருக்கும் வைரஸ் தொற்றியுள்ளது.

இவர்களில் 75 சதவீதத்துக்கும் மேற்பட்டோர் இதுவரை குணமடைந்துள்ளனர்.

அதேவேளை, கண்டி மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாத்திரம் 85 பேருக்கும், மாத்தளை மாவட்டத்தில் 45 பேருக்கும், நுவரெலியா மாவட்டத்தில் 48 பேருக்கும் வைரஸ் தொற்றியுள்ளது.

இதற்கிடையில் மலையகத்தில் பல பகுதிகளிலும் கொரோனா வைரஸ் வேகமாக பரவிவருவதால், சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்றுமாறு பொது மக்களிடம் அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மரண அறிவித்தல்



**பிறப்பு : 01.11.1953 இறப்பு: 17.05.2021**

### இராசையா வெற்றிவேல் (வெற்றி)

யாழ். கைதடி தச்சந்தோப்பைப் பிறப்பிடமாகவும், தச்சந்தோப்பு, பிரான்ஸ் Paris, கனடா Toronto ஆகிய இடங்களை வசிப்பிட மாகவும் கொண்ட இராசையா வெற்றிவேல் அவர்கள் 17-05-2021 திங்கட்கிழமை அன்று கனடாவில் காலமானார் என்ற செய்தியை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

அன்னார், காலஞ்சென்ற இராசையா, முத்தம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வரும், பொன்னுத்துரை காலஞ்சென்ற மனோன்மணி தம்பதிகளின் ஆசை மருமகனும், காலஞ்சென்ற குமாரத்தி (மகேஸ்வரி) அவர்களின் அன்புக் கணவரும், மதன் (பிரான்ஸ்), மதி (கனடா), விஜயன் (கனடா), சுரேஸ் (கனடா), டினேஸ் (கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையும், உதயா (பிரான்ஸ்), பாபு (கனடா), அனோ (கனடா), சுகந்தி (கனடா), பானுஷா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மயூரா, கட்சியா, விஷ்ணு, அகஜன், அனுஷன், அக்ஷன், அகீஷன், அக்ஷதா, சிரேகா, டிவிஜன், ஜாதவி, அர்ஜுன், ஷயன், குட்டியம்மா ஆகியோரின் செல்லப் பேரனும், ராணி (பிரான்ஸ்), பாமா (பிரான்ஸ்), மங்கை (பிரான்ஸ்), ராசாத்தி (பிரான்ஸ்), ஆம்பிள்ளை (பிரான்ஸ்), புஸ்பா (கனடா), காலஞ்சென்ற இந்திரன் (கொலண்ட்), றோசி (கனடா), பக்தி (பிரான்ஸ்) ஆகியோரின் ஆருயிர்ச் சகோதரரும், இராசதுரை (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான செல்வராசா, துரேஸ் மற்றும் சிவலிங்கம் (கனடா), காலஞ்சென்ற சந்திரகுமார் மற்றும் நேசன் (கனடா), உதயன் (கனடா), மஞ்சு (கனடா), சியா (கனடா), சிவா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு:**
**விஜயன் (மகன்) 0016478828637**

ஈழநாடு
Eelanadu

# சீனாவைக் கண்டு இலங்கை பயப்படவே தேவையில்லை!

## வெளிவிவகார அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு



**கொழும்பு, மே 22**

**“கொழும்புத் துறைமுக நகரத்தின் மூல மாக இலங்கை யின் பொருளாதாரத்தில் ஒரு புதிய கதவு திறக்கப்படவுள்ளது. இதற்கு முதல் எப்போதும் இல்லாத அளவுக்கு வாய்ப்புகள் இந்தத் திட்டத்தின் மூலமாகக் கிடைக்கப்போகின்றன. எனவே, ஏனைய நாடுகள் சீனாவைக் கண்டு அஞ்சுவ தைப்போல் நாம் அச்சம் கொள்ளத் தேவையில்லை.”**

- இவ்வாறு சபை முதல்வரும் வெளிவிவகார அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.அவர் மேலும் தெரிவித் ததாவது:-

“கொழும்புத் துறைமுக நகர் உருவாக்கம் மற்றும் அதற்கான ஆணைக்குழு குறித்து கற்பனைக் கதைகளைக் கூறிக்கொண்டு மக்க ளைக் குழப்பும் நடவடிக்கைகளை சிலர் எடுக்கின்றனர். ஆனால், இந்தத் திட்டத்தின் மூலமாக இலங்கைக்கு 15 பில்லியன் டொலர் வருவாயைப் பெற்றுக்கொடுக்கும் வழிமுறை உருவாக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரக் கொள்கைகள், முதலீட்டுக் கொள்கைகள் மாறு பட்டு வருகின்ற இந்தக் காலகட்டத் தில் உடனடியாகத் தீர்மானங்கள் எடுக்கவும், விரைவாகப் பயணிக்க வும் ஆணைக்குழு எமக்கு அவசி யம். எனவே, அதற்கான சட்டத்தை நிறைவேற்றுவதும் அவசியமாகும்.

சீன காலனித்துவமோ, அல்லது சர்வதேசத்தைப் பகைத் துக்கொள்ளும் திட்டமோ இது வல்ல. அவற்றைத் தாண்டிய எதிர்கால நோக்கத்துடன் சிந்தித்துத் தீர்மானிக்க வேண்டும். அதுமட்டுமல்ல, உலக முதலீட்டா ளர்களை இலங்கையின் பக்கம் ஈர்க்க வேண்டுமாயின் அதற்கான ஒரே வழிமுறை பலமான முதலீட்டு நகரை உருவாக்குவதாகும்.

எனவே, சீன மற்றும் அமெரிக்க நாடுகளுக்கு இடையிலான போராட் டத்தை எம்முடம் தொடர்புபடுத் திக் குழப்பிக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை” - என்றார். (இ)

# கொழும்புக்கு அப்பால் சீனாவின் ‘சீலம்’ மலர்வு

### விளைவுகளை இலங்கை எதிர்கொள்ளும் என்று சுமந்திரன் எம்.பி. அபாய எச்சரிக்கை



கொழும்பு, மே 22

“துறைமுக நகர் இலங்கை யின் அதிகார எல்லைக்குள், நீதிமன்றக் கட்டமைப்பின் கீழ் இயங்கும் என்று அரசு கூறிக் கொண்டிருந்தாலும் இலங்கை யின் எல்லையைத் தாண்டிய சீனாவின் பிராந்தியமொன்றே கொழும்புத் துறைமுக நகரில் உருவாக்கப்பட்டு வருகின்றது. எமது கோரிக்கைகளை ஈழம் எனக் கூறிய ஆட்சியாளர் கள் இன்று கொழும்புக்கு அப்பால் சீனாவின் சீலம் உருவாக இடமளித்துள்ளனர்.”

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சா ளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந் திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-


“கொரோனா வைரஸ் பரவல் மிகவும் மோசமான நிலைமையை ஏற்படுத்திக்கொண்டுள்ள இந்த நிலையில், கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் மீதான விவாதத்தை நடத்துவதற்கு முதலில் எனது எதிர்ப்பை வெளிப்படுத் திக் கொள்கின்றேன்.

துறைமுக நகர் திட்டத்தின் பின்னர் இலங்கைக்குள் எல்லைத் தடை தொடர்ந்தும் நீடிக்கின்றது. இலங்கைக்குள் இருந்து கொண்டு செல்லும் பொருட்கள் சுங்கத்தால் பரிசோதிக்கப்படுவதுடன் வரிகளும் அறவிடப்படுகின்றன. எனவே, இது மிகப்பெரிய நெருக்கடியை உருவாக்கப்போகின்றது.

துறைமுக நகர் இலங்கையின் பகுதி என்று அரசு கூறினாலும் அவ்வாறு இல்லாது வேறு ஒரு நாட்டின் அல்லது பிராந்திய எல்லையாக இது உருவாகுவதாகவே எமக்கு தெரிகின்றது.

ஆட்சியாளர்கள் ஈழம் குறித்துப் பேசிக்கொண்டு இருந்தீர்கள். ஆனால் இன்று ‘சீலம்’ ஒன்று உருவாகிக்கொண்டுள்ளது.

நீதிமன்றக் கட்டளைகளுக்குக் கட்டுப்படாத இலங்கைக்கு அப்பால் சீனாவுக்கு சொந்தமான பூமி ஒன்றே உருவாகிக்கொண்டுள்ளது. இதற்கான விளைவுகளை இலங்கை எப்போதாவது அனுபவிக்க வேண்டி வரும்” - என்றார். (இ)



### அவன்ட் கார்ட் வழக்கு:

# நிஷங்க சேனாதிபதி உள்ளிட்ட எட்டு பிரதிவாதிகள் விடுதலை

கொழும்பு, மே 22

சட்டவிரோதமாகத் துப்பாக்கி ரவைகள் கொண்டுவரப்பட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலிருந்து அவன்ட் கார்ட் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் நிஷங்க சேனாதிபதி உள்ளிட்ட 08 பிரதிவாதிகள் விடுதலை செய்யப்பட் டுள்ளனர்.

கொழும்பு மூவரடங்கிய விசேட மேல் நீதிமன்றம் பிரதிவாதிகளை நேற்று விடுதலை செய்துள்ளது.

பிரதிவாதிகளுக்கு எதிராக 19 குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (இ)

# ஜூனில் எம்.பியாக ரணில் பதவியேற்பு

கொழும்பு, மே 22

ஐக்கிய தேசிய கட் சியின் தேசியப் பட்டியல் பாரா ளுமன்ற உறுப்பின ராகக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க நியமிக்கப்படவுள்ளார் என்று கட்சியின் தவி சாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இதன்படி ஜூன் நடுப்பகுதியில் ரணில் விக்கிரமசிங்க பாராளு மன்றத்துக்குப் பிரவே சிக்க எதிர்பார்த்துள்ளார் என்று வஜிர அபேவர்தன மேலும் கூறினார்.

ரணில் விக்கிரமசிங்க வுக்கும் கட்சியின் மூத்த உறுப்பினர்களுக்கும் இடையே கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சந்திப்பின்போதே இந்த முடிவு எடுக்கப் பட்டுள்ளது. கடந்த வருடம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வி அடைந்த நிலையில் அதற்குத் தேசியப் பட்டியலில் ஓர் ஆசனம் கிடைத்தது.எனினும், தேசியப் பட்டியல் உறுப்பினரைத் தெரிவு செய்வதில், ஐக்கிய தேசிய கட்சிக்குள் ஏற்பட்ட நீண்ட இழுபறி நிலையைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (இ

# கொரோனா வைரஸ் தொற்றால் ஒரே நாளில் 38 பேர் உயிரிழப்பு

கொழும்பு, மே 22

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்றுமுன் தினம் மாத்திரம் 38 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைவாக நாட்டில் இதுவரையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண் ணிக்கை 1089 ஆக அதிகரித்துள்ளது.

இதன்படி, நாளொன்றில் கொரோனாத் தொற்றால் அதிகளவானோர் உயிரிழந்த முதலாவது சந்தர்ப்பமாக இது பதிவு செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களுள் 24 பேர் 71 வயதுக்கு மேற்பட்டவர் களாகவுள்ளதுடன், 10 பேர் 61 மற்றும், 70 வயதுக்கு இடைப்பட்டவர்களாகும்.

லுணுகலை, பலாங்கொடை, கட்டுநாயக்க, பாதுரு கொட, கொச்சிக்கடை, நீர்கொழும்பு, தலாத்துஓய, பண்டாரகொஸ்வத்த, பொரளை, பாதெனிய, கல்கமுவ, எதனவத்த, நாவலப்பிட்டி, குருநாகல், எட்டியாந் தோட்டை, பெலிஹுல்ஓய, நேபொட, கலபிட்டமட, நிகவரெட்டிய, வரகாபொல ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், அம்பிட்டிய, மாரசன்ன, ரஜவெல, உடிஸ்பத்துவ, ஹபராதுவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வர்களின் மரணங்களும் பதிவாகியுள்ளன.

கொரோனா நியூமோனியா, நீரிழிவு, இதயநோய் உள்ளிட்ட நாட்பட்ட நோய்களுடன் உருவாகிய சிக்கலான நிலைமைகள் மரணங்களுக்கான காரணங் களாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

# இலங்கையின் இறையாண்மைக்கும் சுயாதீனத்துக்கும் பெரும் அச்சுறுத்தல்

### ஜே.வி.பியின் தலைவர் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 22

“கொழும்புத் துறைமுக நகருக்குள் இலங்கைப் பிரஜை கள் இல்லாத இனக்குழுவொன்று குடியேறவுள்ளது. சீனர்களே இவ்வாறு இலங்கையின் எல்லைக்குள் குடிய மரவுள்ள காரணத்தால் இது இலங்கையின் சுயாதீனத் துக்கும் இறையாண்மைக்கும் பாரிய அச்சுறுத்தலாக அமையப்போகின்றது.”

- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே. வி.பி.) தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக் குழு நாடாளுமன்றத்துடன் முரண்படும் நிலையில் அரச பொறுப்பு, முயற்சிகள் பற்றிய குழு (கோப்) மற்றும் அரச கணக்குகள் பற்றிய குழு (கோபா குழு) முன்னிலையில் கொண்டுவர முடியுமா என கேள்வி எழுப்பினால் அதற்குப் பதில் அரசால் வழங்க முடியாது. ஏனென்றால் ஆணைக்குழுவை பாராளுமன்றக் குழுக்கள் முன்னி லையில் கொண்டுவர முடியாது.

ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ச தெரிவா னவுடன் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ பயணம் செய்த வேளையில், “அம்பாந்தோட்டைத் துறை முகத்தை விற்றமை தவறான செயற்பாடு. நாம் உடன டியாக இந்தத் தவறைச் சரி செய்வோம்” என்று இந்திய ஊடகமொன்றுக்குத் தெரிவித்திருந்தார். ஆனால், அம்பாந்தோட்டையை வழங்கியமை சரியென இன்று கூறுகின்றனர். எனவே, இதில் அரசியல் மற்றும் ஒரு குடும்பம் சார்ந்த வியாபாரமொன்றே முன்னெடுக் கப்பட்டு வருகின்றது” - என்றார். (இ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 414 பேர் கைது

கொழும்பு, மே 22

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 414 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சரியான முறையில் முகக்கவசம் அணியாமை, மாகாண எல்லைகளைக் கடந்தமை தொடர்பான குற்றச்சாட்டுக் கள் தொடர்பில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் இதுவரையில் 11 ஆயிரத்து 320 பேர் கைதுசெய்யப்பட் டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார். (இ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.05.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் : வழங்குபவர் திருமதி .கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE- ராஜாவின் பார்வையிலே
04.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை-அதிகரிக்கும் வீதி விபத்திற்கு யார்பொறுப்பு?
வைத்திய கலாநிதி த. கோபிசங்கர்-என்பு முறிவு சத்திரசிகிச்சை நிபுணர்.
வைத்திய கலாநதி பொன். ஆதித்தன் - நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர்
வைத்திய கலாநிதி உ. மயூரதன்- சட்ட வைத்திய அதிகாரி



**இரவு**
7.00 மணி : சுப்பர் குறூப்-இந்த வாரம் ராகஸ்வரம் இசைக்குழு



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம்-க.பொ.த . உயர்தரப்பரீட்சையில் சாதித்த மாணவர்களோடு சாதனைகளுக்கு பின்னால்-நேயர்களின் வேண்டுகோளிற்கிணங்க மறுஒளிபரப்பு



10.00 மணி : நெற்றிக்கண்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**ஓம் ரிவி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு